
# ஆரம்பக்கல்வி

## ELEMENTARY EDUCATION

FEBRUARY—1955

CONNEMARA PUBLIC LIBRARY
AUG 1956
MADRAS
1086



காங்கிரஸ் மகாசபைத் தலைவர்
திரு. யு. என். தேபர்

ஆரம்பக்கல்வி ஆபீஸ்
94-95, புது தெரு
மண்ணடி, சென்னை-1

# ASSOCIATION PUBLISHING HOUSE

"ARAMBA KALVI OFFICE"

94/95, New Street, Mannady P. O. Madras-1.

POST BOX NO. 1818

## "ஆரம்பக்கல்வி" இனம்

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரையில், எமது "புதுமுறை சங்க வாசகங்களை" அல்லது "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" பாட புத்தகங்களாக, அல்லது ரூ. 50-க்குக் குறையாமல் இதர பாட புத்தகங்களுக்கு ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு, "ஆரம்பக்கல்வி" மாதப் பத்திரிகையை இனமாக மாதாமாதம் அனுப்பிவைக்கப்படும்.

### புதுமுறை சங்க வாசகங்கள்

| | புத்தகத்தின் விலை | | | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 19 | 19-5-'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 22 | 19-5-'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 7 | 0 | 23 | 19-5-'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 8 | 0 | 23 | 19-5-'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 9 | 0 | 23 | 19-5-'54 |

### வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முதல் வகுப்பு | 0 | 4 | 0 | 25 | 19-5-'54 |
| இரண்டாம் வகுப்பு | 0 | 5 | 0 | 25 | 19-5-'54 |
| மூன்றாம் வகுப்பு | 0 | 8 | 0 | 25 | 19-5-'54 |
| நான்காம் வகுப்பு | 0 | 9 | 0 | 25 | 19-5-'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 10 | 0 | 25 | 19-5-'54 |

### கதைப் புத்தகங்கள்

(S. S. அருணகிரிநாதர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பாலர் நல்ல கதைகள்** | | | | | |
| நான்காம் வகுப்பு | 0 | 5 | 0 | 28 | 19-5-'54 |
| **பாலர் கதா போதினி** | | | | | |
| ஐந்தாம் வகுப்பு | 0 | 5 | 0 | 29 | 19-5-'54 |

AUG 1956

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணு.

மலர் 16 } பிப்ரவரி 1955 { இதழ் 2

## இதயத்தைக் கவர்ந்த இலட்சிய கீதம்

இலையே உணவிலையே
கதியிலையே எனும் எளிமை
இனிமேல் இலை எனவே
முரசறைவோம் முரசறைவோம்.

என்று வீரமுழக்கமிட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்.

வாழ வேண்டுமெனில்—தொழில்கள்
வளர வேண்டுமய்யா!
ஏழை என்றொருவன்—உலகில்
இருக்க லாகா தையா!

என்று, அமைதியாக ஆனல் அழுத்தந் திருத்தமாகப் பாடியிருக்கிறார் கவிமணி தேசிக விநாயகம்.

**தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்**
**ஜகத்தினை அழித்திடுவோம்**

*என்று சீறியெழுந்து சிங்கக் குரல் எழுப்பியிருக்கிறார் தேசியக் கவிஞர் பாரதியார்.*

**இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்**
**பரந்து கெடுக உலகியற்றியான்**

*என்று நெடுங்காலத்திற்கு முன்னரே நல்லுரை பகர்ந்திருக்கிறார் உலகத் தலைவர் திருவள்ளுவர்.*

**பசியோடு கிடக்கும் பாட்டாளியிடம் சென்று பரமன் புகழ் பாடுவது பயனற்றது! வேதாந்தம் பேசுவது வீண்! அவன் கேட்பது உணவு, உடை, வாழ இடம்! வேதாந்த விசாரணை அல்ல.**

*என்று எழிலும் சுவையும் ததும்பிடும் வகையில் தெரிவித்திருக்கிறார் இந்தியாவின் முதல்வர் பண்டித நேரு.*

**எங்கே மனிதன் உழைப்பை மனிதன் சுரண்டுவது இல்லையோ, எங்கே சிலர் பலரை அடக்கி ஆள்வது இல்லையோ, எங்கே ஏழ்மையும் இல்லாமையும் இல்லாமல் இருக்கிறதோ அங்கேதான் உண்மை ஜனநாயகம் மலரும்.**

*என்று சுருங்கச் சொல்லி விளங்க வைத்துவிட்டார் பாட்டாளிகளின் தலைவர் லெனின்.*

*ஆம்! இல்லாமை என்னும் கொடுமையை ஒழித்தாக வேண்டும் என்பதிலே, உலக மக்களிலே மிகப் பலர் வயிறார உண்ணவும் உணவின்றித் தவிக்கும் அக்கிரமத்தின் ஆயுளை உடனடியாக முடிவு கட்டியாகவேண்டும் என்பதிலே, எல்லோருக்கும் உணவு உடை இருப்பிடம் கல்வி ஆகியவற்றைத் தந்தாக வேண்டும் என்பதிலே, உலகப் பேரறிஞர்கள் அத்தனை பேரும் ஒரே கருத்து உடையவர்களாகத் தான் இருக்கிறார்கள்.*

*ஒரு சிலர் மட்டும் உண்டு கொழுத்து உல்லாசபுரியிலே உலவுவதும், ஏனைய எல்லா மக்களும் பட்டினியால் துடித்துப் பதறி அழுவதும் முறையா என்கிற கேள்வி, உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இன்றையதினம் கேட்கத்தான் செய்கிறது.*

*கைப்பிடி அளவுள்ள இரண்டொருவர் மட்டும் மாட மாளிகைகளிலேயும் கூட கோபுரங்களிலேயும் சுகபோக வாழ்விலே உருண்டு கொண்டிருப்பதும், ஏனைய கோடான கோடி மக்களெல்லாம் சேரிகளிலேயும் வீதிமுனைகளிலேயும் சாக்கடைப் புழுக்களென வாடுவதும் நியாயமா என்கிற உள்ளக் குமுறல் இளகிய நெஞ்ச*

படைத்த ஒவ்வொருவரின் சொற்களிலேயும் இன்றையதினம் நிழலாடத்தான் செய்கிறது.

இலட்சக்கணக்கிலே பணத்தைக் கொட்டிவைத்து அவற்றின் மீது படுத்துப் புரளும் சீமான்கள் எனும் நிலையில் ஒரு சிலரும், வறுமை, இல்லாமை, ஏழ்மை, பசி, பஞ்சம், பட்டினி இவற்றையெல்லாம் பரப்பிவைத்து இந்த நெருப்பு அலைகளுக்கு இடையே சிக்கித் தவிக்கும் நிலையில் மிகப் பலரும் தொடர்ந்து இருப்பது சரியா என்கிற பிரச்சினை இதுபோது மூலைமுடுக்கெங்கும் தோன்றத்தான் செய்கிறது.

உல்லாச வாழ்க்கையும் உயர்தரமான நிலையும் படைத்தவர்களாகச் சிலரும், வாழ வாழியின்றி உண்ணவும் உணவின்றி மிகப் பலரும், என்று, இரு வேறு பிரிவுகளாக மக்கள் பிரிந்திருப்பது, அக்கிரமமான முறை மட்டுமல்ல, ஜீவகாருண்யமற்ற ஏற்பாடு என்பது மட்டுங்கூட அல்ல, உலகத்தின் அமைதிக்கே பேராபத்தைத் தாக்கூடிய ஆபத்தான நிலைமையும் ஆகும்.

இந்த விசித்திர நிலைமையை மிக விரைவில் ஒழித்தாக வேண்டும்.

எல்லா மக்களுக்கும் போதுமான உணவும் உடையும் தங்கும் இடமும் கிடைத்தாக வேண்டும்.

ஏழை என்று ஒரு கூட்டமும் பணம் படைத்தவர்கள் என்று மற்றொரு கூட்டமும் இருக்கும் ஏற்பாடு தொலைந்தாக வேண்டும்.

வறுமை—அப்படியென்று ஒரு நிலை முன் ஒரு காலத்தில் இருந்ததாம்—சரித்திர ஏடுகளிலே படித்திருக்கிறோம்—ஆனால் இப்போதெல்லாம் அது கிடையாது என்று சொல்லத்தக்க நிலை ஏற்பட்டாகவேண்டும்.

ஏழ்மை தொலைந்து, வறுமை அகன்று, இல்லாமை என்பது இல்லாமலாகி, எல்லா மக்களுக்கும் வாழ்க்கையின் அடிப்படை வசதிகள் அத்தனையும் கிடைக்கின்ற ஒரு சமுதாயத்தைத்தான் சமதர்ம சமுதாயம் என்று உலகம் குறிப்பிடுகிறது.

இப்படிப்பட்ட ஒரு சமதர்ம சமுதாயத்தை இந்தியாவில் ஏற்படுத்துவதுதான் தன்னுடைய இலட்சியம் என்று அனைத்திந்திய காங்கிரஸ் கட்சி, அண்மையில், ஆவடியில் கூடிய அதன் மாபெரும் மாநாட்டின்மூலம் உலகுக்கு அறிவித்திருக்கிறது.

ஏற்கனவே, தென்னாட்டில் திராவிட முன்னேற்றக் கழகம் இந்த உயரிய குறிக்கோளைத்தான் தன்னுடைய இலட்சிய கீதமாகக் கொண்டு பணியாற்றி வருகிறது.

திராவிடக் கழகத்தின் அடிப்படைக் கோட்பாடும் இதுவேதான்.

பொதுவுடமைக் கட்சியினர் வலியுறுத்தி வருவதும் இந்த சம தர்ம சமுதாய அமைப்பைத்தான்.

சோஷியலிஸ்ட் கட்சியினர் தேவை தேவை என்று கூறுவதும் இதே இலட்சிய பூமியைத்தான்.

இப்போது, ஆவடி மாநாட்டின் மூலம் காங்கிரஸ் கட்சி ஒப்புக் கொண்டிருப்பதும் இந்தக் கொள்கை முழக்கத்தைத்தான்.

நடைமுறையில் இந்த சமதர்மக் கொள்கையை எந்த அளவுக்குக் கையாளப் போகிறது காங்கிரஸ் கட்சி—அது நமக்குத் தெரியாது.

காங்கிரஸ் கட்சிக்குள் நிலவும் பலவித சூழ்நிலைகள், இந்தக் கொள்கையின் நிறைவேற்றத்தை எந்த அளவுக்கு அனுமதிக்கும்—அதனையும் நாம் அறியோம்.

ஆனால் ஒன்று. அனைத்திந்திய காங்கிரஸ் மட்டும் இந்த சமதர்மக் கொள்கையை உண்மையாகவே ஒப்புக்கொண்டு நடைமுறையிலே அதனைக் கையாளவும் ஆரம்பித்துவிட்டால், சென்ற சில ஆண்டுகளாக அது வேகமாக இழந்துவரும் செல்வாக்கை மீண்டும் பெற முடியும்.

எது எப்படியிருந்தாலும் சரி, சமதர்ம இலட்சியம்தான் இன்றையதினம் எல்லா இயக்கங்களின் இதயங்களையும் கவர்ந்திருக்கிறது என்பது ஆவடித் தீர்மானம்மூலம் தெளிவாகிவிட்டது.

ஆரம்ப ஆசிரியர்களின் இறுதி இலட்சியமும் சமதர்ம சகாப்தத்தை உருவாக்கும் இந்த அரும் பணியாகத்தான் இருக்கமுடியும்.

இங்ஙனம் எல்லோருடைய இதயங்களையும் கவர்ந்துவிட்ட இலட்சிய கீதத்தை நடைமுறை நாதமாக்கும் காரியத்தில் காங்கிரஸ் கட்சி உடனே ஈடுபடவேண்டும்.

மத்திய அரசாங்கமும் சரி, மாநில அரசாங்கங்களும் சரி, காங்கிரஸ் கட்சியின் ஆதிக்கத்தில்தான் உள்ளன.

வேறு எந்தக் கட்சிக்கும் இல்லாத அளவு பத்திரிகை பலம் அந்தக் கட்சிக்கு இருக்கிறது.

அந்தக்கட்சியிடம் இருக்கிறபிரசார்வசதியோ ஏராளம் ஏராளம்.

அறுபது ஆண்டுகளுக்கு மேல் இருந்து பண்பட்ட பலமான அமைப்பும் அந்தக் கட்சியிடம் உண்டு.

ஆசியாவின் ஒளிவிளக்கு என்றும், மனிதருள் மாணிக்கம் என்றும் புகழப்படுகிற ஒரு மாபெரும் தலைவர்—பண்டித நேரு—அந்தக் கட்சியிடம் இருக்கிறார்.

இவ்வளவு வசதிகள் இருந்தும் அந்தக் கட்சி, சமதர்ம சகாப்தத்தை, இந்நாட்டில் ஏற்படுத்தத் தவறிவிட்டால், எதிர்காலம், அந்தக் கட்சியை மன்னிக்கமுடியாது.

எனவேதான் கூறுகிறோம், காங்கிரஸ் கட்சி, இந்தத் துறையில், நடைமுறையில் ஈடுபட்டு, உருவான பணி புரியவேண்டும்.

மாநாட்டிலே தீர்மானம் நிறைவேறிவிட்டது. மிக மிக மகிழ்ச்சி, ஆனால் செயலிலே தீர்மானம் நிறைவேறவேண்டும்.

நிறைவேறுமா? எப்போது? எம்முறையில்?

பொறுத்திருந்து பார்ப்போம்.

# பண்டித நேரு பேசுகிறார்!

"தென்னாட்டில் இதுபோது இராமாயணத்தைக் கேலி செய்து நாடகங்கள் பல நடத்தப்படுகின்றன. இதனைக் கேள்விப்பட்டு நாம் ஆத்திரப்படுவதில் பயனில்லை. இப்படியெல்லாம் நிலைமைகள் உருவாவதற்குரிய காரணம் என்ன என்பதைத்தான் நாம் பொறுமையாக இருந்து கண்டறியவேண்டும்.

"வட இந்தியாவில் உள்ளவர்கள் தென் இந்தியர்களை அடக்கி ஆள்கிறார்கள் என்கிற ஒரு கருத்து தென்னிந்தியாவில் பரவியிருக்கிறது. மொழித்துறையில் மட்டுமல்ல, அரசாங்கப் பதவிகள், பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் முதலிய எல்லாத் துறைகளிலுமே தென்னிந்தியாவின்மீது வட இந்திய ஆதிக்கம் வலுத்து விட்டது என்று அங்கே கருதப்படுகிறது.

"இன்றையதினம் மட்டுமல்ல, ஆயிரக் கணக்கான ஆண்டுகளாகவே, வட இந்தியர்கள் இப்படித்தான் தென்னிந்தியர்களை அடக்கி ஆண்டிருக்கிறார்கள் என்றும், வாய்ப்புக் கிடைத்தால், மறுபடியும் அப்படியே செய்வார்கள் என்றும் மக்களுக்கு எடுத்துச் சொல்லவே இராமாயணத்தைக் கேலி செய்யும் நாடகங்கள் அங்கே நடத்தப்படுகின்றன.

"இந்த அடிப்படையை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். தென்னிந்தியாவில் ஏற்பட்டுள்ள இந்த உணர்ச்சியை இங்குள்ள ஹிந்தி மொழியைப் பரப்புவதில் பேரார்வம் காட்டுபவர்கள் மறந்து விடக்கூடாது. அங்கே பரவியுள்ள அந்த உணர்ச்சியை அலட்சியம் செய்வது ஹிந்தி மொழியின் வளர்ச்சிக்கும் நல்லதல்ல. இந்தியாவின் முன்னேற்றத்திற்கும் உகந்ததல்ல."

இப்படியெல்லாம் பேசியிருக்கிறார் பண்டித நேரு.

13–12–54 அன்று, புதுடில்லியில், ஹிந்திமொழியில் இலக்கியத்தை வளர்ப்ப தெப்படி என்பதைப்பற்றி ஆராய்வதற்காக அந்த மொழிப் பயிற்சியில் தேர்ச்சி பெற்றவர்களும் ஆர்வம் படைத்தவர்களும் கூட்டம் ஒன்று நடத்தியிருக்கின்றனர்.

அந்தக் கூட்டத்தில் பேசுவதற்காக அல்ல, வெறும் பார்வையாளராக இருந்து, அங்கே பரிமாறப்படுகிற கருத்துகளைக் கண்டறிவதற்காகத்தான் அங்கு வந்தாராம் பண்டித நேரு.

வந்த இடத்திலே, ஹிந்தியைப் பற்றியும் இராமாயணத்தைப் பற்றியும், பலர் பல விதமாகப் பேசுவதைக் கேட்ட பண்டிதர், திடீரென்று எழுந்து மேலே குறிப்பிட்டபடி தெளிவுரை பகர்ந்தாராம்.

இராமாயணத்தைப்பற்றியும், அதனை எதிர்த்து நடத்தப்படுகிற நாடகங்களைப் பற்றியும், அந்த நாடகங்களின் அடிப்படையில் அமைந்திருக்கிற காரணங்களைப் பற்றியும், இத்துணைத் தெளிவாகச் சொற்பொழிவாற்றியிருக்கிற பண்டித நேரு, மகாபாரதத்தைப் பற்றியும் பேசாமல் இல்லை.

மகாபாரதத்தில் வருகின்ற ஏகலைவன் கதை நம் அனைவருக்கும் தெரிந்ததுதானே —அந்தக் கதையை அப்படியே எடுத்துச் சொல்லி விட்டு மேலும் பேசியிருக்கிறார் பண்டிதர் :—

"மகாபாரதத்தில் வருகின்ற மிகவும் உருக்கமான கட்டங்களில் ஒன்று ஏகலைவனின் கதை. இந்தக் கதையைப் பற்றி இதுவரையில் நான் சிந்தித்ததேயில்லை. ஆனால் இரண்டு நாட்களுக்கு முன்பு, ஒரிஸ்சாவுக்குப்போயிருந்தேன். அங்கே, ஏகலைவனின் கதைக்கு ஒரு புதிய அர்த்தம் கற்பித்து ஒரு நாடகம் நடத்தப்படுவதைக் கண்டேன். க்ஷத்திரியர்களின் குருவாகிய துரோணாச்சாரியார், ஏகலைவன் ஒரு சூத்திரன் என்கிற காரணத்தால் அவனுக்கு வில் வித்தை கற்பிக்க மறுத்ததையும், அதன்பிறகு ஏகலைவன் துரோணரின் உருவச் சிலை ஒன்றை அமைத்து அதன் முன் இருந்து தானாகவே வில் வித்தையைக் கற்று, அத்துறையில் நிபுணனாக மாறியபோது, தன்னுடைய உருவச் சிலையை அமைத்து அதன்முன் இருந்து வில் வித்தை கற்றமையால் தனக்குக் குரு தட்சணை தரப்படவேண்டும் என்று துரோணர் கோரியதையும், அப்படிக் கேட்கப்பட்ட குரு தட்சணை, ஏகலைவனின் கட்டை விரல் என்பதையும் எடுத்துக் காட்டி, எப்படி ஒரிசா பகுதியைச் சேர்ந்த பெருங்குடி மக்கள் முன் நாளில், மேல் வர்க்கத்து மக்களால் கொடுமைப் படுத்தப்பட்டார்கள் என்பதற்கு இதனை ஒரு சிறந்த உதாரணமாகச் சித்தரித்திருக்கிறது அந்த நாடகம்."

"இராமாயணம் பாரதம் முதலிய ஏடுகளில் உள்ள கதைகளைக் கண்டு இப்படிப்பட்ட விளைவுகள்கூட ஏற்படுகின்றன என்பதை நாம் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். உண்மை என்னவென்றால், முற்காலத்தில் வரலாற்றை எழுதியவர்கள், தங்களுக்கு ஏற்ற வகையில் அதனை எழுதிக் கொண்டுவிட்டார்கள். எனவேதான், இப்போது, வேறுபலர், தங்களுக்குத் தோன்றிய வகையில், இந்த நிகழ்ச்சிகளை மாற்றி அமைத்துவிடுகிறார்கள். யாரோ சில விஷமிகள் தூண்டி விடுவதால்தான் இப்படிப்பட்ட நாடகங்கள் நடக்கின்றன என்று நாம் கருதுவதில் பயனில்லை. எனக்கேகூட, ஏகலைவனின் கதையை இப்போது நினைத்துப் பார்த்தால், மற்றவர்கள் தங்களுடைய ஆதிக்கத்துக்குப் போட்டியாக வந்துவிடக்கூடாதே என்பதற்காக ஒரு சிலர் எவ்வளவு தவறாக நடந்திருக்கிறார்கள் என்பதை எண்ணி ஆத்திரம் வரத்தான் செய்கிறது. எனவேதான் கூறுகிறேன். இப்படிப்பட்ட பிரச்சினைகளை நாம் மிகவும் பொறுமையோடும் அமைதியோடும் கவனிக்கவேண்டும்."

தெளிவாகப் பேசியிருக்கிறார் பண்டிதர்.
விளக்கமாக அறிவித்திருக்கிறார் உண்மைகளை.

இராமாயணம் பாரதம் முதலியன புனிதமான ஏடுகள் என்று கருதப்படலாம் பலரால்.

அத்தகு ஏடுகளை அடுக்கிவைத்துப் பூஜை செய்து அவற்றிற்குத் தூப தீப ஆராதனை புரிபவர்களும் நாட்டிலே இருக்கலாம் ஏராளமாக.

அவற்றைப் படித்தாலும், படிப்பவர் தம் பக்கம் நின்று கேட்டாலும், கேட்டவர் தம் பெயர்கள் தமைப் பஜித்தாலும் மோட்ச சாம்ராஜ்யத்தில் தனி இடம் நிச்சயம் என்று கருதுபவர்களும் இருக்கலாம்.

ஆனால் அதே நேரத்தில், இந்த ஏடுகளில் வருகின்ற சில பல நிகழ்ச்சிகளைக் கண்டு மனவேதனைப் படுபவர்களும் நாட்டிலே இருக்கத்தான் செய்கிறார்கள்.

இராமாயணமா—அது, வட இந்தியர்கள் தென்னிந்தியர்களுக்கு இழைத்த கொடுமையின் சின்னம்—இப்படிச் சிலர் கருதுகிறார்கள் தென்னிந்தியாவில்.

ஏகலைவனின் வரலாறுதானே—விளக்கமா தேனவ அதற்கு—மேல் சாதிகளில் இருந்த ஆணவக்காரர்கள் எப்படிக் கீழ்சாதி மக்களைச் சுரண்டிக் கொழுத்தனர் என்பதற்கான விளக்கம் தானே அது? இவ்வாறு பலர் பேசுகிறார்கள் ஒரிசாவில்.

வேறு பற்பலரைப் பற்றிப் பேசுவானேன்—பண்டித் நேருவுக் கேகூட கடுங்கோபம் ஏற்படுகிறதாம் ஏகலைவனின் கதையைக் கேட்டால்—அவரே கூறுகிறார்—அதுவும் அழுத்தந் திருத்தமாக.

ஏகலைவனின் கதையை எடுத்து மொழிந்துவிட்டு அவரே கேட்கிறார்—இப்படியெல்லாமா ஆதிக்கக்காரர்கள் நடந்து கொள்வது—மற்றவர்கள் தங்களுடன் போட்டிக்கு வரக்கூடாதே என்பதற்காக இவ்வளவு தவறான முறைகளையெல்லாமா கையாள்வது என்று கொதித்தெழுந்து பேசுகிறார்.

இராமாயணமும் பாரதமும் எப்படி சில சமுதாயங்களின் மன உணர்ச்சிகளைப் புண்படுத்துகின்றன என்பதை இதைவிடத் தெளிவாக யார் விளக்கமுடியும்?

இப்படியெல்லாம் பல மக்களின் உணர்ச்சிகளைப் புண்படுத்துகின்ற கதைகள் இனியும் பள்ளிக்கூடப் புத்தகங்களில் பாடங்களாக இருக்கலாமா? ஏன் இருக்க வேண்டும்? இருப்பதாலே என்ன நன்மை?

சிலர் போற்றுகின்றனர் இந்த ஏடுகளை. வேறு சிலர் தூற்றுகின்றனர்.

சிலருக்குக் கரும்பென இனிக்கின்றன இத்தகு கதைகள். வேறு சிலருக்கோ வேம்பாகக் கசக்கின்றன.

வாழ்க்கைக்கு வழிகாட்டும் வளம் மிகு சுவடிகள் என இவற்றைச் சித்தரிக்கின்றனர் ஒரு சாரார். வேறொரு சாராரோ ஒரு கூட்டம் மற்றொரு கூட்டத்தைச் சுரண்டிக் கொழுத்ததின் விளைவுகள் அல்லவா இந்தச் சுவடிகள் என்று கொதித்தெழுந்து கேட்கின்றனர்.

பூசலுக்கும் பிணக்குக்கும் பகைமைக்கும் போராட்டத்திற்கும் உரிய பிரச்சினைகளாகி விட்டன இந்தக் கதைகளும் ஏடுகளும்.

இந் நிலையில், பூசலுக்கும் பிணக்குக்கும் அப்பால் இருக்க வேண்டிய பள்ளிக்கூடங்களில் இந்த ஏடுகளுக்கு ஏன் இடம்?

எனவேதான் கூறுகிறோம், பள்ளிக்கூடங்களிலே, பாடபுத்தகங்களிலே, இளைஞர்களுக்கான கல்வித் துறையிலே, இந்த ஏடுகளை நுழைக்கவேண்டாம்; பூசலை வளர்க்க வேண்டாம்.

# கிராமத் தொழிற்சாலைகள் !

**D. E. மாசிலாமணி,** ஆசிரியர், ஆசிரியப் பயிற்சி மன்றம்,
விருதம்பட்டு.

(ஒரு கிராமத்தின் மத்தியிலிருந்த ஒரு பெரிய அரச மரத்தடியில் பல கிராமவாசிகள் உட்கார்ந்து புகைபிடித்துக்கொண்டு வீண் பொழுது போக்கிக்கொண்டிருந்தனர். அதனைப் பலமுறை கவனித்திருந்த சாக்ரடீஸ் ஒரு நாள் அவ்விடம் தோன்றினார். கிராமவாசிகள் பெரியாருக்கு வணக்கம் செய்தனர். அவரும் மறு வந்தனம் செய்த பின்பு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டார்.)

**கிராமவாசி 1 :**—ஐயா ! நாங்கள் எல்லாம் இங்கு சோம்பேறித்தனமாய் வீண் பொழுது போக்குவதாக நீர் நினைப்பது போல் தெரிகிறது. ஏனென்றால் எங்கு சென்றாலும் கிராமக் கைத்தொழில்களை ஓய்வு நேரத்தில் செய்யவேண்டுமென்று நீர் சொல்லி வருவது எனக்குத் தெரியும்.

**சாக்ரடீஸ் :**—ஆம் ! பயிர்த் தொழிலாளிகள் தாங்கள் வேலை செய்யும் நேரத்தைத் தவிர நீண்ட ஓய்வு நேரங்களில் ஏதாவது பயனுள்ள கைத்தொழில்கள் செய்வதை நான் விரும்புகிறேன். ஏனென்றால், 'சைத்தான் சோம்பேறித் தனமாய் உட்கார்ந்திருக்கிறவர்களையே ஏதாவது தீய காரியம் செய்யும்படிக்கு நாடுகிறான்' என்று பல்லாண்டுகளுக்கு முன்பே அறிஞர்கள் சொன்னார்கள். ஆனால் இந்த சிறந்த கிராமத்து ஜனங்களாகிய நீங்கள், அத்தகைய தொழில்களைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை !

**கிராமவாசி 2 :**—ஐயா ! நீங்கள் ஏன் அப்படி நினைக்கிறீர்கள் ?

**சாக்ரடீஸ் :**—ஏனென்றால் நான் வருகின்ற வழியிலேயே பல நல்ல தொழில்கள் கிராமத்தில் நடைபெறுவதைக் கவனித்தேன்.

**கிராமவாசி 3 :**—ஐயா ! எங்கள் கிராமத்தில் மக்கள் எப்போதும் சுறுசுறுப்பாகவே இருப்பார்கள். நீங்கள் அதனைப்பற்றி புகழ்ச்சியாய்ப் பேசுவது மகிழ்ச்சிக்குரியதே ; ஆனால் நீங்கள் சிறப்புள்ளதாக இங்கு என்ன தொழில் நடைபெறுவதைப் பார்த்தீர்கள் ?

**சாக்ரடீஸ் :**—இதோ இந்த அரசமரத்தடியிலே ஒரு நல்ல தொழில் நடக்கவில்லையா ?

**கிராமவாசி :**—நீங்கள் என்ன சொல்கிறீர்கள் ?

**சாக்ரடிஸ் :**—புகைபிடிக்கும் தொழிலும், வம்புத் தொழிலும் இங்குத் தவருது நடைபெறுகிறது, என்றுதான் சொல்கிறேன்.

**கிராமவாசி:** —ஐயா! நீங்கள் சொல்வது வேடிக்கையாயிருக்கிறது. நாங்கள் தினந்தோறும் இங்கு அமைதியாய் உட்கார்ந்து புகைபிடித்துக் கொண்டே அன்றைத்தின நிகழ்ச்சிகளைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்போம். இதில் என்ன தவறு இருக்கிறது ?

**சாக்ரடிஸ் :**—சரியாய்ச் சொன்னுய்! நீயே இங்கு புகை உற்பத்தி தொழில் நடக்கிறதென்று ஒப்புக்கொண்டாய். ஹுக்காவில் புகை பிடித்துக்கொண்டு வீண்பொழுது போக்கும் இவ்விடங்களிலிருந்தே வம்புகளும், சச்சரவுகளும், குறும்புகளும் கிளம்புகின்றன என்பதை நீ மறுக்க முடியுமா ?

**கிராமவாசி 4 :**—ஐயா! அதுவும் சில சமயங்களில் நடப்பது உண்மைதான்! ஆனுல் நீர் ஏன் இப்படி எங்களைப் புகழ்வது போல் இகழ்ந்து அவமதிக்கிறீர்?

**சாக்ரடிஸ் :**—நண்பர்களே! உங்கள் கிராமப் பெண்கள் செய்து வரும் இரண்டு முக்கிய கைத்தொழில்களைச் சொல்லுகிறேன்; கேளுங்கள். சாணம் தட்டி அடுப்புக்கு விறகு ஆயத்தம் செய்வது ஒன்று; எந்திரத்தில் மாவு அரைப்பது மற்ருென்று. இவ்விரண்டு வேலைகளுக்குமே தினமும் இவர்களுக்குப் பொழுது இருக்கின்றது; ஆகவே இவர்கள் குடும்பத்திற்கு முக்கியமாய்ச் செய்ய வேண்டிய குழந்தை வளர்ப்பு, வீட்டு சுத்தம், சுகாதார முறைகளை அனுசரித்தல் போன்ற கடமைகளைச் செய்யத் தவறி விடுகின்றனர். மேலும் மாட்டு சாணத்தை அடுப்பெரிக்கப் பயன் படுத்துவதால் நல்ல எருவை இழந்து அதனுல் கிடைக்கக்கூடிய அதிக பயனையும் இழந்து விடுகிறீர்கள்.

**கிராமவாசி 5 :**—பெரியாரே! நீங்கள் சொல்வதில் உண்மை இருக்கத்தான் செய்கிறது. எங்கள் பெண்கள் பெரும்பாலும் பயனற்ற தொழில்களையே செய்து வருகின்றனர். ஆனுல் நீங்கள் பாராட்டக்கூடிய பயனுள்ள வேறு எத் தொழிலும் இங்குக் காணவில்லையா ?

**சாக்ரடிஸ் :**—நோய் உற்பத்தி தொழிற்சாலைகள், ஈ, கொசு உற்பத்தி சாலைகள் முதலியன விமரிசையாய் இங்கு நடப்பதையும் கவனித்தேன். ஆகவே உங்கள் கிராமத்தைச் சுற்றிலும் சுறுசுறுப்பாய்ப் பல தொழில்கள் நடந்துகொண்டுதான் இருக்கின்றன.

**கிராமவாசி 6 :—** ஐயா! இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் ஈயும் கொசுவும் எங்கும் இருப்பது சகஜந்தானே?

**சாக்ரடீஸ் :—** ஆம்; நீங்கள் மிகவும் இரக்க சிந்தையுள்ளவர்கள்! அதனால்தான் கண்டவிடங்களிலெல்லாம் குப்பை கூளங்களைக் கொட்டி கழிவு நீர்களை பொதுவிடங்களில் ஓடவிட்டு ஈக்களும், கொசுக்களும் தடையின்றி உற்பத்தியாக ஒத்துழைக்கிறீர்கள். அவைகளும் உங்களுக்கு நன்றி காட்டுவதற்காகப் பல நோய்கள் தொழிற்சாலையைக் கிராமத்தில் ஏற்படுத்துகின்றன!

**கிராமவாசி 7 :—** ஐயா! மேலும் மேலும் எங்களை அவமதிக்க வேண்டாம்; எங்களுடைய குற்றத்தை மாத்திரம் தயவு செய்து சொல்லுங்கள்.

**சாக்ரடீஸ் :—** போதுமான ஜன்னல்கள் இல்லாது கட்டப்படும் உங்கள் வீடுகள் ஒரு நோய்த் தொழிற்சாலை என்று சொல்லுவதில் என்ன தவறு இருக்கிறது? காற்றும் வெளிச்சமும் இல்லாத அவ்விடத்தில் நீங்கள் எப்படி ஆரோக்கியமாக வாழமுடியும்?

**கிராமவாசி 8 :—** ஐயா! நீங்கள் எப்போதும் எங்களைப் பரிகாசம் செய்தே எங்கள் குற்றத்தையும் கண்டித்து விடுகிறீர்கள்.

**சாக்ரடீஸ் :—** நண்பர்களே! நான் உங்கள் அறியாமையையும், மூடப் பழக்க வழக்கங்களையும் குறித்து அதிகமாக நினைத்துக் கோபம் கொள்ளப் பார்த்தால் எனக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போலிருக்கிறது. ஆகவேதான் உங்களைப் பரிகசித்தே, உங்கள் தவறுகளை உணர்த்துகிறேன். அதன் மூலம் நீங்கள் பிற்காலத்திலாவது அதைத் திருத்திக்கொள்வீர்கள் அல்லவா?

**ஒரு கிராமத்தவன் :—** சாக்ரடீஸ் பெரியாரே! உமது நல்ல நோக்கங்களுக்காக உமக்கு நன்றி. ஆனால் எங்கள் பழக்கங்களைக் கொஞ்சங் கொஞ்சமாகத்தான் நாங்கள் மாற்றுவது கூடும்.

**சாக்ரடீஸ் :—** குழிகள் அவசியமான இடத்தில் தோண்டப்பட்டு, குப்பைக் கூளங்கள் அங்குதான் போடவேண்டுமென்று ஒரு கட்டாய கிராம சட்டத்தை ஏற்படுத்தினால் என்ன?

**கிராமத் தலைவன் :—** ஐயா! அதுவும் நல்ல ஆலோசனைதான். அப்படி ஒரு சட்டமிருந்தால் வீண் தர்க்கங்களும், சச்சரவுகளும், தடுக்கப்படுவதுடன் நாமும் அலைந்தலைந்து அறிவீனமான சிலருக்கு இதன் அவசியத்தைப்பற்றிக் கூறும் வேலையும் குறையும். அதன் பிறகாவது நீங்களும் நானும் சற்று ஓய்ந்திருக்கலாம்.

**சாக்ரடிஸ் :**—ஓய்ந்திருப்பதா? தோழனே! கிராம சீர்திருத்தத்தில் பங்குகொண்ட நமக்கு ஓய்வே கிடையாது. குழிதோண்டும் விதி நல்சீர்திருத்தத்தின் சிறு ஆரம்பமேயாகும்; நமது கிராமங்களை மேலும் ஆரோக்கியமுள்ளதாக, பயனுள்ளதாக, கல்வி அறிவு உள்ளதாக, சந்தோஷம் நிறைந்ததாக மாற்ற விரும்பினால் என்னைப் போல் ஐம்பது சாக்ரடிஸ்களுக்கு நூறு வருடங்கள் ஓய்வு இருக்க முடியாதென்றே நினைக்கிறேன்!

**கிராமத் தலைவன் :**—ஐயா! நாங்கள் இப்போது இருக்கும் நிலையிலேயே இருக்கும்படி திருப்தி கொள்ளுகிறோம். நீர்தான் வீணாக கிராமவாசிகளாகிய எங்களை அலட்டி, மிரட்டி, பரிகசித்து சில நல்ல காரியங்களையும் செய்து எங்கள் திருப்தி மனப்பான்மையைக் கெடுக்கிறீர்.

**சாக்ரடிஸ் :**—இந்த விஷயத்தில் உங்கள் திருப்தி மனப்பான்மையையே மிகவும் வெறுக்கிறேன்.

**கிராமத் தலைவன் :**—அப்படியானால் எங்களை ஏன் தொந்தரவு செய்கிறீர்? எங்களுக்காக, நீர் ஏன் வீண் சிரமம் எடுத்துக்கொள்ள வேண்டும்? எங்களை இருக்கும் நிலையிலேயே விட்டுவிடும்.

**சாக்ரடிஸ் :**—நண்பர்களே! அதற்கு என்மனம் இடந்தரவில்லை. நான் பல தேசங்களையும் சுற்றி அவற்றின் சிறப்புகளைக் கண்டறிந்தவன்; அவைகளுடன் உங்கள் கீழான நிலையை ஒப்பிட்டுப் பார்த்து உங்கள் அறிவீனத்தினால் உங்கள் தேசத்திற்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தையும் துன்பத்தையும் உணர்ந்தே தயாதுசீர்திருத்தும்படி உழைக்கிறேன். பழங்காலத்தில் உங்கள் பழைய முறைகளும் பழக்கங்களும் பொருந்தியிருந்தன. ஆனால் இப்போதோ காலம் விரைவாக மாறிக்கொண்டு வருவதால் உங்கள் பிள்ளைகளும் பின் சந்ததியாரும் ஆரோக்கியமாய் கல்வியறிவுள்ளவர்களாய் வாழவேண்டுமானால், அதற்குத் தக்கபடி உங்கள் பழைய வழக்கங்களை விட்டொழித்து விடவேண்டும். கிராமத்திலுள்ள சிலர் நன்றாகக் கல்விகற்று அறிவுக் கண்கள் திறக்கப்பெற்று வெளி நாடுகளுக்கும் சென்று திரும்பிவர நேரிட்டால், நிச்சயமாக அவர்கள் தங்கள் கிராமம் பழைய முறையிலேயே இருப்பதை விரும்பாது, அதற்காக உழைத்து கல்வியும், உலக அனுபவமுமில்லாத உங்கள் திருப்தி மனப்பான்மைக்கு ஒரு முற்றுப்புள்ளிவைக்கப் பாடுபடுவார்கள். அதன் மூலம் உங்கள் எதிர் காலமாயினும் முன்னேற்றமடையுமே என்றுதான் நான் நம்பி மிக்க ஆவலுடன் உழைத்து வருகிறேன்.

[இதனைக் கூறிவிட்டு கிராமவாசிகளின் பதிலுக்குக் காத்திராது நடக்க ஆரம்பித்தார் சாக்ரடீஸ். சிறிது தூரம் அவர் சென்றபின்பு இறைந்து கைதட்டி கூப்பிட்ட சப்தம் கிராமவாசிகளுக்குக்கேட்டது. அவர் சொல்லியதில் இரண்டு பதங்களே கிராமத்தினர் செவிக்கு எட்டிற்று. "வாசனைத் தொழிற்சாலை!" என்பதே அது! தெருக்களின் ஓரத்தில் காணப்பட்ட மலஜலங்களைக் குறித்தே அவர் அப்படிச் சொன்னார் என்பதையறிந்து அவர்களின் நகைப்பு அடங்க வெகு நேரம் ஆயிற்று!]

---

## கடவுள் இல்லை என்று யார் சொன்னது?

### "கடவுள் இல்லை என்பவர், தமிழரில் இருக்க முடியாது"

### யார் சொன்னது?

"கடவுள் இல்லை என்பவன் மற்ற மதங்களில் இருப்பான். தமிழர்களில் இருக்கவே முடியாது. கடவுள் இல்லை என்ற கருத்தைத் தெரிவிக்கத் தமிழில் ஒரு சொல் கூட கிடையாது.

### மாறுதல் ஏற்படாது

கடவுள் இருக்கிறார் என்பதாலோ, இல்லை என்பதாலோ, மக்கள் நிலைமையில் பெரியமாறுதல் ஏற்பட்டு விடப்போவது இல்லை.

ஒழுக்கம், உண்மை, அன்பு, பிறருக்கு உதவிசெய்யும் தன்மை இவைதான் கடவுள்.

இது பகுத்தறிவுகாலம், புரட்சியுகம். மூட நம்பிக்கைகள் சரிந்து பகுத்தறிவுக் கொள்கைகள் மலைபோல் வளரும் காலம் இது.

### காற்றில் பறக்கிறது!

அவதார புருஷர் வாக்கு, ரிஷிகள் வாக்கு, ராமன் வாக்கு எல்லாம் காற்றில் பறக்கின்றன. பிரபு (கடவுள்) வந்து சொன்னாலும் கோவில் எவனும் கட்டமாட்டான்.

இருக்கிற கோவில் போதும், பள்ளிக்கூடம், ஆஸ்பத்திரி கட்டு என்றுதான் சொல்வான்.

### புரட்சிக் காலம்

இத்தகைய புரட்சிக் காலத்தில் நம்மை அதற்குத் தகுந்தாற் போல் மாற்றிக் கொள்வதுதான் புத்திசாலித்தனம், காட்டுமிராண்டித்தனமான கொள்கைகளைக் கட்டி அழுது கொண்டிருக்கக் கூடாது—என்று மலாய் நாட்டுப் பேச்சு ஒன்றில் ஈ. வெ. ரா. கூறியுள்ளார்.

—தினத்தந்தி.

# விவசாயத்துக்கு அணுசக்தி

(ஜகதீஸ் ஆர். மால்ஹோத்ரா)

அணுவைக்கொண்டு இந்தியா விளைவைப் பெருக்கத் திட்டமிடுகிறது. அமைதியான அணு சக்திப் பொருள்களால் விவசாயத் துறையில் பெரும் பலன் காண இந்திய விஞ்ஞானிகள் முயல்கிறார்கள். இம்முயற்சியால் சிறந்த உணவு நிரம்ப விளையும் எனத் தெரிகிறது.

ஆராய்ச்சிக்குப் பெருந்துணை செய்யும் அணுசக்திப் பொருள்கள் இந்தியாவுக்கு வந்திருக்கின்றன. அணுசக்தியை ஆக்கமான வேலைகளில் செலுத்தும் வழிதுறைகளைக் காணும் அமெரிக்க ஆராய்ச்சிக் கூடங்களில் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ள இந்திய விஞ்ஞானிகள் இங்கு ஆராய்ச்சி நடத்துகிறார்கள்.

அமைதியான அணுசக்திப் பொருள்களில் முக்கியமானவை "ரேடியோ ஐஸோடோப்புகள்" என்பவையாகும். அவை யாவை? தானே சிதையும் அணுவிலிருந்து கட்புலனுக்குத் தெரியாத கதிர்கள் கிளம்பும். இரும்பு, பாஸ்பரஸ், அயடின் முதலிய பொதுவான பொருள்கள் அணுச் சிதைவு இல்லாதவை. அத்தகைய அணுச் சிதைவில்லாத பொருள்களையும் அணு உலையில் இட்டு அணுச் சிதைவுள்ளவை களாக்கலாம். அணுச் சிதைவு ஏற்பட்டதும் அவை தாமே கதிர் வீசும் (கண்ணுக்குத் தெரியாத கதிர்கள்.) இத்தகைய கதிர் வீசும் பொருள்களை அணுக் கதிர் இயக்கமுள்ள பொருள்கள் எனலாம். இவையே "ரேடியோ ஐஸோடோப்புகள்" என்பவை.

புதுடில்லிக்கு அருகில் பூசா என்னுமிடத்திலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்கு அமெரிக்க அரசாங்கத்திடமிருந்து அணுக்கதிர் இயக்கமுள்ள பாஸ்பரஸ் கிடைத்திருக்கிறது.

அணுக்கதிர் இயக்கமுள்ள பொருளின் கதிரியக்கத்தைக் கண்டு பிடிக்கும் கருவிகள் உள்ளன. "கெய்கர் கவுண்டர்" என்பது அவ்வகைக் கருவிகளில் ஒன்று. எனவே அணுக்கதிரியக்கமுள்ள பொருள் வேறொரு பொருளில் மறைந்திருந்தாலும் அதனைக் கண்டு பிடித்து விடலாம்.

செடி கொடிகள், உயிர்ப் பிராணிகள், உரம், நம் உடம்பு முதலியவற்றில் அணுக்கதிரியக்கமுள்ள பொருளைச் செலுத்தினால், அப்பொருள்களுள் அது எவ்வெவ்வாறு செல்கிறது என்பதைத் துல்லியமாக அளந்தறிந்துவிடலாம்.

## உரத்தின் தேவை அறிய

உரத்தோடு அணுக்கதிரியக்க முள்ள ஒரு பொருளைக் கலந்து செடிக்கு வைத்தால், அந்த உரம் செடியில் எப்படி எப்படிச் செல்கிறது, எங்கெங்கு போய் நிற்கிறது என்பதெல்லாம் தெரிந்து விடும். ஆகவே ஒரு செடிக்கு எவ்வளவு இரசாயன உரம் வேண்டும் என்று கணக்கிடுவதற்கு அணு ஆராய்ச்சி உறு துணையாகிறது. இதற்கு முன் அதனைப் பயிரின் பலன்களைக் கொண்டே கணக்கிட வேண்டிய தாயிருந்தது. அதற்கு நாளாகும். அப்படியும் அப்பழைய முறை முழுதும் திருப்தியளிப்பதாக இல்லை.

அணுக்கதிரியக்கமுள்ள பொருள்கள் விவசாயத் துறையில் பல விஷயங்களை நுணுக்கமாக அறிய உதவுகின்றன என்பதற்கு இன்னொரு உதாரணம் காணலாம். வளர்ந்த பயிர்களில் பாஸ்பரஸ் உண்டு. இப் பாஸ்பரஸ் நிலத்தில் இயற்கையாயுள்ளதிலிருந்து எடுத்ததா அல்லது நிலத்தில் வைத்த உரத்திலிருந்து கிடைத்ததா என்றறிய அணுக்கதிரியக்கமுள்ள பொருள்கள் பயன்படுகின்றன.

மேலும், பயிருக்கு எந்தெந்தப் பருவத்தில் உரம் மிகத் தேவை என்பதை அறியவும், அவ்வுரத்தை எந்த இடத்தில் எப்படி வைத்தால் நிரம்பப் பயன் விளையும் என்பதைக் காணவும், எந்த மண்ணுக்கு எந்த உரம் வேண்டும் என்பது தெரியவும் விஞ்ஞானிகளுக்கு அணுக்கதிரியக்கப் பொருள்கள் மிக்க உதவி.

"பாஸ்பேட்", என்பது பயிர்களுக்கெல்லாம் இன்றியமையாத உப்பாகும். அநேகமாக எல்லா உரங்களிலும் பாஸ்பேட் உண்டு. உரத்திலுள்ள பாஸ்பேட்டுடன் அணுக்கதிரியக்கமுள்ள பாஸ்பரஸைக் கலந்து வைத்தால், நிலத்திலும்பயிரிலும் பாஸ்பரஸ் என்ன ஆகிறது என்பதை "கெய்கர் கவுன்டரை"க்கொண்டு அறிந்துவிடலாம்.

இந்த ஒரு ஆராய்ச்சியால் பயிர்களைப்பற்றி எவ்வளவோ புதிதாகத்தெரியவந்திருக்கிறது. உரத்தை நிலத்தில் வைத்ததுமே அதிலுள்ள பாஸ்பேட்டை பயிரின் வேர்கள் எடுத்துக்கொள்கின்றன என்பது அங்ஙனம் கண்டுகொண்ட உண்மை. இவ்வாறே, புல்லிதழில் தடவிய பாஸ்பேட் புல்லுக்குப் பயன்படுகிறது என்றும், வளங்குன்றிய மேய்ச்சல் நிலத்தைப் பாஸ்பேட் உரத்தால் வளம் சிறக்க வைக்கலாம் என்றும் அமெரிக்காவில் அணுக்கதிரியக்கப் பொருள்களால் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

சோளமும், புகையிலையும், கரும்பும், பருத்தியும் இளம் பருவத்தில்தான் பாஸ்பேட்டை உட்கொள்ளுவதாக ஆராய்ச்சி சொல்கிறது. எனவே, அவை பெரிதாக வளர்ந்தபின் நிலத்தில்

வைக்கும் உரம் அவற்றுக்குப் பயன் படாது. ஆனால் உருளைக் கிழங்கு வளரும் பருவம் முழுவதும் பாஸ்பேட் அதற்குப் பயன்படுமாம்.

பயிருக்குப் பாயும் தண்ணீரில் பாஸ்போரிக் ஆஸிடைக் கலந்து விட்டாலும் காய்ந்த நிலத்தில் உரம் வைக்கும் பலன் கிடைக்கும் என்பதும் அணுக் கதிரியக்கப் பொருள்களால் அறியப்படுகிறது. இவ்வாறு தண்ணீர் வழியாக உரம் வைப்பதால் செலவு குறைவு.

## இந்தியாவின் திட்டம்

இந்தியாவிலுள்ள நிலங்களில் பாஸ்பேட் உப்பு எவ்வளவு எவ்வளவு உண்டு என இந்திய அரசாங்கம் அணுக்கதிரியக்கப் பொருள்களால் ஆராயத் திட்டமிட்டுள்ளது. அந்த ஆராய்ச்சியின் முடிவு தெரிந்த பின்னரே இந்தியாவில் பாஸ்பேட் உரங்கள் செய்ய வேண்டுமா, வேண்டாமா என்பது முடிவாகும்.

மண்ணில் இருக்கும் பாஸ்பரஸ் போதுமா போதாதா என்பதும் இந்திய அரசாங்கம் மேற்கொள்ளும் ஆராய்ச்சியால் தெரியும். குறைவாக இருந்தால், செயற்கை உரம் எவ்வாறு வைக்கவேண்டும் என்பதையும் இந்த ஆராய்ச்சி புலப்படுத்தும்.

இந்த ஆராய்ச்சியைப் பூசாவிலுள்ள இந்திய விவசாய ஆராய்ச்சி நிலையத்து இரசாயனப் பகுதித் தலைவர் டாக்டர் எஸ். பி. ராய் சௌத்ரியும், அண்மையில் அமெரிக்காவுக்குப் போய், வேளாண்மைக்கு அணுசக்தி பயன்படும் முறைகளைப் படித்து வந்த டாக்டர் என். பி. தத்தாவும் மேற்பார்வை செய்வார்கள். இன்னும் அமெரிக்காவில் இருக்கும் இன்னொரு இந்திய அதிகாரி டாக்டர் பி. ஸி. ராஹேஜாவும் இவர்களுடன் வேலை செய்வார்.

இந்த ஆராய்ச்சியை நடத்துவதற்கு வேண்டியவர்களை இம்மூவரும் டாக்டர் ஜேம்ஸ் எம். புளும் என்பவரும் பயிற்றுவிப்பார்கள். டாக்டர் புளும் இதற்குரிய ஆராய்ச்சி நிலையத்தை அமைப்பதற்காக அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பு திட்டத்தால் கிடைத்திருப்பவராவர்.

பூசா நிலையத்தில் இந்த ஆராய்ச்சிக்குரிய கட்டுமானங்கள் கட்டி முடியுந் தறுவாயிலுள்ளன.

மண்வளம் ஆராய்வதற்கு 16 ராஜ்ய ஆராய்ச்சிக் கூடங்கள் கட்டுவதென இந்திய அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. அத்திட்டத்தின் ஒரு பகுதியே பூசா நிலையத்து ஆராய்ச்சிக்கூடம். அத்திட்டத்துக்கு அமெரிக்கத் தொழில் நுட்ப ஒத்துழைப்பினால் 3,29,850 டாலர் (ரூ. 15,76,683) கிடைக்கிறது.

16 ராஜ்ய ஆராய்ச்சிக்கூடங்களையன்றி, இடம் பெயர்ந்து செல்லக்கூடிய ஆராய்ச்சி வண்டி ஒன்றும், ஆராய்ச்சி வசதிகள்

அனைத்தும் அமையப்பெற்று, நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள் நடைபெறும் இடங்களிலும் மற்றும் சில இடங்களிலும் மண் வளத்தை ஆராயும்.

விவசாயிகள் பயிர்செய்யும் மண்ணின் நிலையறிந்து அதற்கேற்ற பயிரையும், உரத்தையும், பயிர் செய்யும் முறையையும் அறிந்து பாடுபட்டால், விளைவு பெருகும் என எண்ணியே இத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இனி, எந்த விவசாயியும் தனது நிலத்தின் மண்ணை ராஜ்ய ஆராய்ச்சிக்கூடத்துக்கு அனுப்பி அதன் தரத்தை அறிந்து கொள்ள வழி யுண்டாகும்.

மண் வளத்தைத் தெரிவிக்கும் நிலப் படங்களைத் தயாரிக்கும் பகுதி ஒன்று பூசா நிலையத்தில் உருவாகிறது. அதற்கு வேண்டிய கருவிகள் அமெரிக்காவிலிருந்து வரவழைக்கப்படுகின்றன. அப்பகுதியின் வேலைகளை மேற்பார்க்கக் கூடியவர் எல். என். மாதூர் அமெரிக்காவில் பயிற்சி பெறுகிறார்.

இந்த முயற்சிகளெல்லாம் இனி வளர்ந்து பூத்துக் காய்த்துப் பெரும் பயன் அளிக்கும் என்கிறார்கள் இந்திய விஞ்ஞானிகள். இன்னும் சில ஆண்டுகளுக்குள் அணுசக்திப் பொருள்களின் உபயோகம் பன்மடங்காகும் என்பது அவர்கள் கருத்து.

மக்கள் தங்கள் அறிவையும் பொருள்களையும் ஒன்றுய்த் திரட்டி அமைதிக்காலத்து ஆக்க வேலைகளுக்கு அணுவைப் பயன்படுத்தினல், அவர்கள் அடையக் கூடிய முன்னேற்றத்தை யாரால் அளந்துரைக்க முடியும்?

"சுதேசமித்திரன்"

---

## அறிஞரின் தேன் துளிகள்

இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் இயலாது. ஒருவனைப் பகைத்து, மற்றவனை சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு, மற்றவனை அசட்டைப் பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் இயலாது.

—இயேசு கிறிஸ்து.

மக்கள் காணவேண்டுமென்று, அவர்களுக்கு முன்பாக உங்கள் தர்மத்தை செய்யாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். மக்களால் புகழ்ப்பட வேண்டுமென்று மாயக்காரர்கள் வீதிகளிலும், ஆலயங்களிலும் செய்வது போல தாரை ஊதுவியாதே. உன் வலது கை செய்வது இடது கைக்குத் தெரியாமலிருக்கட்டும்.

—இயேசு கிறிஸ்து.

# அவசரமாக வீசப்படும் அர்த்தமற்ற கண்டனங்கள்!

"இப்பொழுதுள்ள கல்வி முறைக்கு எழுந்துள்ள கண்டனங்கள் அனைத்தும், தவறான அடிப்படையிலிருந்து கிளம்பியுள்ளவைகளேயாகும். கல்விப் பண்பு குறைவாகக் காணப்படுகிறது என்பதற்காக அல்லாமல், முற்காலத்தில் அக்கல்வி பெற்றவர்களுக்கு வேலை கொடுத்துவந்ததுபோல், அது, இக்காலத்தில் கொடுக்க உத்தரவாதமளிக்கவில்லை என்பதை அடிப்படையாகக் கொண்டே, மேற்படி கண்டனங்கள் கிளம்பியுள்ளன."

*—இவ்வாறு, இந்தியப் பேரரசின் கல்வித்துறைத் துணை அமைச்சராக இருந்துவரும் பேராசிரியர் உமாயூன் கபீர் எழுதியுள்ளார்.*

இந்தியப் பேரரசின் கல்வித் துறை மூன்று திங்களுக்கு ஒரு முறை வெளியிட்டு வரும் 'கல்வி இதழ்'ல், 'இப்பொழுதுள்ள கல்வி முறை உண்மையிலேயே பெருந் தவறுடையதா?' என்ற தலைப்பில் மேற்படி பேராசிரியர் ஒரு கட்டுரை தீட்டியுள்ளார். அக் கட்டுரையில்தான் கல்வி முறையைக் கண்டிப்பவர்களின் நோக்கையும், தன்மையையும் விளக்கமாகச் சுட்டிக் காட்டியுள்ளார். அவர் அக்கட்டுரையில் மேலும் கூறியுள்ளது வருமாறு:—

"தற்காலக் கல்வி முறையின் வெவ்வேறு பிரிவையும் தனித் தனியாகப் பாகுபாடு செய்து, அவைகள் மீது எழுந்துள்ள கண்டனங்களை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அக் கண்டனங்கள் அனைத்தும் நியாயமானவை அல்ல என ஒருவரால் வழக்காட முடியும்.

எழுதுவதையும், படிப்பதையும்தான் இந்தியாவின் தொடக்கக் கல்வி வலியுறுத்துகிறது என்பதில் ஐயமில்லை. ஆனால் அவை இரண்டும்தான் கல்வி முறை அனைத்தினுடையவும் அடிப்படை தேவை என்பதை ஒருவரும் மறுக்கார். சிறார்களிடம் நற்பழக்கங்களைப் பயிற்றுவிக்கும்முனைப்பு தொடக்கக் கல்விமுறைக்கு இல்லை எனக் குறைபடுவதும் உண்மைதானா? அப்படி தோல்வி ஏற்பட்டிருக்குமானால், ஆசிரியர்களின் தரக் குறைவும், கல்வி கற்கும் சிறார்களின் அளவுக்கதிகமான எண்ணிக்கைப் பெருக்கமும், இட வசதி விளையாட்டு வெளி, பள்ளிச் சாதனங்கள், நூல்கள் மேலும் இது போன்ற வசதிகளின்மையும்தான் அதற்கான காரணமாகும்.

உயர்நிலைக் கல்விமுறை பற்றி எழும் கண்டனங்களோ வரை

கடந்த ஒன்றாகும். இப்பொழுதும் உயர்நிலைக் கல்வி மன உணர்வையும் பெரிய அளவில் நூல்களைக் கற்றலையும் உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது. கற்கும் இளைஞர்களின் விருப்பத்திற்கும், ஆற்றலுக்கும் ஏற்ற வகையில் வேறுபாடு கொண்டதாகக் கல்வி இருக்க வேண்டுமென்ற கோட்பாடு, அண்மையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள ஒன்றாகும் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இதுவரை நூற்கல்வியைப் பெறுவதுதான் கல்வி என ஒப்புக்கொள்ளப்பட்டு வந்திருக்கிறது. சிந்தனா சக்தியும், பகுத்தறியும் பண்பும்தான் மனிதனை மற்ற உயிர்களிலும் உயர்ந்தவன் என்ற நிலையை மனிதனுக்குக் கொடுத்திருப்பதால், இது வியப்புக்குரியதாக இருக்கவில்லை. தொடக்கக் கல்வியைப் போன்றே உயர்நிலைக் கல்வியிலும், ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தல், மாணவர்களின் பெருக்கத்திற்கேற்ப ஆசிரியர்களின் எண்ணிக்கையைக் கூட்டல், இன்று இருக்கப்பெறாத பலவித அடிப்படை சாதனங்களுக்கு ஏற்பாடு செய்தல் போன்றவற்றில் திருத்தங்களைச் செய்ய முனையவேண்டும்.

உயர் படிப்பு, வெறும் குமாஸ்தாக்களை உருவாக்குவதையே இலட்சியமாகக் கொண்டிருக்கிறது என்பது தெளிவான தவறாகும். இக்கல்வி முறையின் மூல இலட்சியமே வேறு என்பதை அறிவதற்கு, இக்கல்வி, தனக்குத்தானே மன உணர்வு, சிந்தனைக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கும் ஒன்றே போதிய அத்தாட்சியாகும். உயர்ந்த கணிதம், மனஉணர்வு, தத்துவ விசாரணை, அரசியல் உரையாடல் முதலியன ஒரு குமாஸ்தாவை உருவாக்குவதற்குத் துளியும் வேண்டப்படாதவைகளாகும்.

இந்தியர்களை மேல்நாட்டு விஞ்ஞான சிந்தனைகளுடன் இணைத்து இந்திய மறுமலர்ச்சிக்குத் துணை செய்வதில் நடைமுறையில் உள்ள கல்விமுறை ஆற்றியுள்ள பெரும் பணியை மறக்க முடியுமா?

ஐரோப்பிய அரசியல் சிந்தனை, வரலாறு ஆகியவற்றின் செல்வாக்கினடியாக நாம் பெற்ற சுதந்திர உணர்வும், இறுதியாகப் பெற்றுள்ள விடுதலையும் வெளிப்படையாகத் தெரிந்த ஒன்றாக இருப்பதால், அதற்குத் தனி விளக்கம் தேவை இல்லை. இத்துடன், இந்திய ஒற்றுமை உணர்வு வளர்வதற்கும், இக் கல்வியில் எவ்வளவு குறைபாடுகள் இருந்தபோதிலும், இக்கல்வி முறை பெரும் வலிவுடன் பணிபுரிந்திருக்கிறது என்பதையும் சேர்த்துக்கொள்ள வேண்டும்."

—'நம்நாடு'

## வாழ்வும் விளக்கமும்

# டாக்டர் ஜெகன்!

காலப்போக்கில் ஏற்படும் சிறு சிறு வாய்ப்புகளையும் பயன்படுத்தித் தனது ஆதிக்கம் உலகின் பல முனைகளிலும் நிலைபெறச் செய்து, "ஞாயிறு மறையாத பேரரசு" என்ற பெயர் பெற்ற ஆங்கிலப் பேரரசில் அடங்கியுள்ள நாடுகளில் பிரிட்டிஷ் கயானாவும் ஒன்றாகும்.

பிரெஞ்சுக் கயானா, டச்சுக் கயானா ஆகிய நாடுகளை அடுத்தடுத்துக்கொண்டு, தென் அமெரிக்காவின் வட கோடியில் இடம் பெற்றிருக்கும் பிரிட்டிஷ் கயானா, பிரிட்டிஷ் காமன் வெல்த்தின் குடியேற்ற நாடுகளில் ஒன்று. கி. பி. 15-ம் நூற்றாண்டிற்கு முன் கயானா பகுதி அடர்ந்த காடுகளால் மூடப்பெற்று நாகரிக மற்ற செவ்விந்தியர்கள் வாழ்ந்த இடமாக விளங்கிற்று. கி. பி. 1498-ல் கொலம்பஸ் இப்பகுதியைக் கண்டு பிடித்தபின் பல ஐரோப்பிய நாட்டினர் அமெரிக்க நாடுகளில் குடியேறத் தலைப்பட்டனர். தென் அமெரிக்காவில் ஸ்பானியருடைய ஆதிக்கம் இருந்துவந்தது. ஆங்கிலேயர் முதலில் தென் அமெரிக்க நாடுகளுடன் வணிகத்தொடர்புதான் கொண்டிருந்தனர். 1617-ல் சர். வால்டர் ராலே என்பவன் ஆங்கிலேய அரசு கயானாப்பகுதியில் நிலை பெறவேண்டும் என்ற எண்ணத்தை வெளியிட்டு அதற்கான திட்டங்களைத் தீட்டினான். அப்பொழுது அரசாண்ட ஜேம்ஸ் மன்னன் ஸ்பானியர் பகையை விரும்பாது ராலேயின் திட்டத்திற்கு இணங்கவில்லை. இங்கிலாந்து முடிக்கத்தவறிய அத்திட்டத்தை மேற்கொண்டு டச்சுக்காரர்களும் பிரெஞ்சுக்காரர்களும் கயானா நோக்கிக் கலம் விடுத்தனர். 1598-ல் டச்சுக்காரர்கள் தமது ஆதிக்கத்தை கயானாப் பகுதியில் நிலைநாட்டினர். அதை யடுத்துப் பிரான்சும் தனக்கொரு இடத்தைப் பிடித்துக்கொண்டது. வட அமெரிக்காவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் குடியேறிய தோட்டப் பண்ணைக்காரர்கள் கயானாவின் செழுமை கேட்டுத் தமது கவனத்தைத் தெற்கே திருப்பினர். டச்சுக்காரர்களிடமிருந்த பகுதிகளில் கொஞ்சங் கொஞ்சமாகக் குடியேறி 1770-ல் ஆங்கிலேயர் டச்சுக்காரரைவிட அதிகமாகிவிட்டனர். தங்கள் ஆதிக்கம் வேரூன்றிவிட்டது என்று அறிந்தபின் 1796-ல் ஆங்கிலேயர் டெமாரா என்ற பகுதியை டச்சுக்காரரிடமிருந்து கைப்பற்றிக்கொண்டனர். இரு நாடுகளுக்கும் அடிக்கடி பூசல் ஏற்பட்டுக் கடைசியில் 1802-ல் டச்சுக்காரர்கள் தாம் இழந்த பகுதியைப் பெற்றனர். ஆனால் மீண்டும்

அடுத்த ஆண்டு 1803-ல் ஆங்கிலேயர் அதைக் கைப்பற்றியபின் 1814-ல் ஆங்கிலேய குடியேற்ற நாடு என்று அறிவிக்கப்பட்டு உரிமையாக்கப்பட்டது. இவ்விதமாகக் கயானாப் பகுதி மூன்று பிரிவுகளாகப்பிரிந்து பிரிட்டிஷ் கயானா, டச்சுக் கயானா, பிரெஞ்சுக் கயானா என்று தனித்தனிக் குடியேற்ற நாடுகளாக மாறின.

காடுகளடர்ந்த கரடு முரடான நிலத்தை அழித்துப் பண்படுத்திக் கழனிகளாக மாற்ற உடல் வலுப்பெற்ற நீக்ரோ மக்களால் தான் முடியும் என்று கண்ட ஐரோப்பியர், ஆப்ரிக்காவிலிருந்து நீக்ரோ மக்களை அழைத்து வந்தனர் அடிமைகள் என்ற முத்திரை பொறித்து. இந்தவகையிலே பிரிட்டிஷ் கயானாவுக்கும் அடிமைகள் கொண்டுவரப்பட்டு அவர்கள் உழைப்பால் கரும்புத் தோட்டங்கள் பல உருவாக்கப்பட்டு, சர்க்கரைத் தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன. அலுமினிய மூலப் பொருளான பாக்சைட் அதிகமாகக் கிடைத்ததால் அதை எடுத்துப் பிரிக்கும் தொழிற் சாலைகளும் ஏற்பட்டன.

குடியேற்ற நாடுகளில் அடிமைகள் படும் அவதியைக் கண்ட ஆங்கிலேயர் சிலர் அதைத் தடுக்கும்படியான சட்டமியற்றக் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சி வெற்றிபெற்று 1807-ல் ஆங்கிலேயருக்குச் சொந்தமான இடங்களில் அடிமை வாணியம் ஒழிக்கப்பட்டு, 1838-ல் அடிமை முறையும் ஒழிக்கப்பட்டது.

விடுதலை பெற்ற நீக்ரோவர்கள் தோட்டங்களில் வேலை செய்ய அதிகமான ஆனால் நியாயமான கூலி கேட்டனர். தோட்ட முதலாளிகள் கூலியை உயர்த்த எண்ணங்கொள்ளாது கூலியாட்கள் கிடைக்க வேறொரு முறையைக் கையாண்டனர். எழுத்து உடன்பாடு (Indenture) என்ற முறையின்படி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு கட்டாய வேலைக்கு கையெழுத்து வாங்கிக் கூலியாட்களை அழைத்து வந்தனர். சீனா, இந்தியா, போர்த்துக்கல் முதலிய நாடுகளில் இந்த முறைக்கு ஆட்கள் கிடைத்துள்ளனர். வறுமையுடன் போராடிக் காலங் கழித்துவந்த இந்திய சீன மக்களுக்கு இந்த வாய்ப்பு பெரிதெனப்பட்டது.

முன்பிருந்த அடிமை முறைக்கும் எழுத்து உடன்பாட்டு முறைக்கும் அதிக வேறுபாடுகள் இல்லை. இரும்பு விலங்குகளுக்குப் பதிலாகக் காகித விலங்குகள் இடம்பெற்றன. உரிமைகளற்ற நடைப்பிணங்களாகவே இவர்களும் தோட்டங்களில் உழைத்துவந்தனர். 1838-ல் அடிமைமுறை அகன்றதிலிருந்து 1917-ல் கடைசியாகக் குடியேறிய கூட்டம்வரை பிரிட்டிஷ் கயானா 4,30,000 பேர்களை இந்தியா, ஆப்ரிக்கா, மடேய்ரா, சீனா ஆகிய நாடுகளிலிருந்து தருவித்திருந்தது. பிரிட்டிஷ் கயானாவி

ளுள்ள மக்கள் தொகை 1911-ல் 3,09,000, 1921-ல் 3,07,000 என்றால் இந்த இடைக்காலத்தில் அங்கு மக்கள் வாழ்வு எப்படி இருந்திருக்கும் என்பதை ஒரு வாறு ஊகிக்கலாம்.

பிரிட்டிஷ் கயானவில் இருந்த ஆங்கிலேய முதலாளிகள் அங்கு வாழ்ந்த மற்றநாட்டு மக்களின் நலத்தையும், தேவையையும், நாட்டு முன்னேற்றத்தின் அவசியத்தையும் கவனியாமல் தங்கள் தங்கள் தொழிலுக்கேற்ற திட்டங்களைத் தங்கள் விருப்பப்படி வகுத்துக் கொள்ளும்படியான ஒரு சூழ்நிலையில் தான் அரசாங்கமும் அமைந்திருந்தது. முதலாவது உலக யுத்தம் முடிந்தபோதுதான் பிரிட்டிஷ் கயானவில் மனித உரிமைகள் பற்றிய கருத்துக்கள் பரவலாயின.

1922-ல் ஆங்கிலப் பேராசிலேயே முதன் முறையாக **பிரிட்டிஷ் கயான சங்கம் (The British Guiana Union)** என்ற தொழிற் சங்கம் உருவாக்கப்பட்டது. 1931-ல் உலகப் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டபோது **பிரிட்டிஷ் கயான தொழிலாளர் கழகம்** உருப்பெற்றது. 1939-க்குள் 10 தொழிற்சங்கங்கள் அமைக்கப் பட்டன. 1941-ல் **பிரிட்டிஷ் கயான தொழிற்சங்க மன்றம்** ஏற்படுத்தப்பட்டு எல்லாத் தொழிற்சங்கங்களும் அத்துடன் இணைக்கப்பட்டன.

தொழிலாளர்களுக்கு அரசியல் வாழ்வில் இடமில்லாமலே இருந்துவந்தது. 1910-ல் 3 லட்சம் பேர்களில் 11,000 பேர்களுக்குத்தான் வோட்டுரிமை வழங்கப்பட்டிருந்தது. 1928-ல் திருத்தப்பட்ட அரசியல் சட்டமும்பயனற்றதாகவே இருந்தது. இதிலும் தொழிலாளர்களுக்கு வோட்டுரிமைவழங்கப்படவில்லை; கவர்னருக்கே அதிகாரங்கள் அதிகம் தரப்பட்டிருந்தன.

மத்திய வகுப்பினரை அதிகமாகக் கொண்ட **லிபரல் கட்சி** அரசியல் சட்டத்தைச் சீர் திருத்துமாறு கிளர்ச்சி செய்ததையொட்டி 1943-ல் ஒரு புதிய அரசியல் சட்டம் உருவாக்கப்பட்டது. ஆனால் உலக யுத்தத்தின் காரணமாக தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டது.

இதே ஆண்டுதான் அமெரிக்கா சென்று டாக்டர் பட்டம் பெற்ற **செட்டி ஜகன் (Cheddi Jagan)** என்பவர் திரும்பி வந்தார். அவர் அமெரிக்காவில் தங்கிய ஏழு ஆண்டுகளில் அரசியலைப்பற்றி நன்கு அறிந்துகொண்டார். முக்கியமான அரசியல் நிகழ்ச்சிகளைப்பற்றிக் கட்டுரைகள் வரைந்து, கயான கிளர்ச்சி இயக்கத்தை வளர்க்க ஆரம்பித்தார்.

தொழிலாளர் முன்னணிகள் வலுப்பெற்று வளரவேண்டிய

நேரத்தில் இன அடிப்படையில் தொழிலாளர் அமைப்புகள் பணியாற்றிவந்தன. இந்தியர்கள் பிரிட்டிஷ் கயானா வந்து சேர்ந்த போது அவர்களைவிட ஆப்ரிக்கர்கள் எல்லாத்துறைகளிலும் சிறந்து விளங்கினர். படித்தவர்களுக்கு மட்டுமே வோட்டுரிமை இருந்ததால் இந்தியர்களை விட ஆப்ரிக்கர்களுக்கே அரசியல்வாழ்வில் அதிக செல்வாக்கு இருந்தது. ஆகவே இந்த இரு இனங்களும் ஒன்றையொன்று போட்டியிட்ட வண்ணமே பிரிந்து நின்றன. 1947–ல் டாக்டர் ஜகன் சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது, எல்லா முன்னேற்ற சக்திகளையும் ஒன்றுதிரட்டி, இனவழி சேராமல், தொழிலாளர் உயர்வு கருதிப் பாடுபடச் செய்தார்.

1950–ல் இங்கிலாந்து தொழிற்கட்சி சர்க்கார், பிரிட்டிஷ் கயானாவின் அரசியல் சட்டத்திலுள்ள குறைகளைப்போக்க **வாடிங்டன்** என்பவர் தலைமையில் குழு ஒன்றை நியமித்தது. இக்குழு அமைத்த முறைப்படி வயது வந்தவர்களுக்கெல்லாம் வாக்குறிமைகள் அளிக்கப்பட்டாலும், சட்டங்களை மாற்றக்கூடிய வகையில் கவர்னருக்கு அதிகாரமும் கொடுக்கப்பட்டிருந்தது. 1953 ஏப்ரலில் பொதுத்தேர்தல்கள் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.

1950–ல் **பர்ன்ஹாம்** என்பவரைத் தலைவராகவும் டாக்டர் ஜகனின் மனைவியார் **ஜேனட் ஜகனை** செயலாளராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட **மக்கள் முன்னேற்றக் கழகத்தில் (The People's Progressive Party)** பங்குகொண்டு டாக்டர் ஜகன் தமது கொள்கைகளைப் பரப்பினார். பொதுவுடைமை (Socialist) சர்க்கார் நிலைபெற நாட்டங்கொண்ட மக்கள் முன்னேற்றக் கழகம் தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. தொழில் வளர்ச்சி, உணவு—நிதி நிலைமை, நிலச்சீர்திருத்தம், கல்வி மாற்றம் ஆகியவை குறித்துத் தங்கள் கொள்கையை விளக்கினர். மக்கள் முன்னேற்றக் கழகத்தை எதிர்த்து மற்றும்மூன்று கட்சிகள் போட்டியிட்டன. இக்கட்சிகள் ஒன்றுசேர்ந்து 'முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகள் கேடு பயக்கக்கூடியதாகும், நாடு நாசமாகிவிடும்' என்று கூக்குரலிட்டனர். மாதாகோயில் பாதிரிகளும் முன்னேற்றக் கழகத்தினர் அதிகாரத்திற்கு வந்தால் கோயில்களை இடித்துச் சொத்துகளைப் பறித்துவிடுவர் என்றும், மக்களிடமிருந்து நிலங்களைப் பிடுங்கிவிடுவார்கள் என்றும் கோயிலுக்கு வரும் பக்தர்களிடம் ஓயாமல் கூறிவந்தனர்.

தேர்தல் அமைதியாக நடைபெற்றது. வயது வந்தவர்கள் எல்லோரும் வோட்டுப் போட்டனர். ஆவலோடு எதிர்பார்த்திருந்த முடிவுகள் வெளிவந்தன. மொத்தம் 24 இடங்களில் முன்னேற்றக் கழகத்தினர் 18 இடங்களில் வாகைசூடி மீண்டனர்.

ஜூன் மாத மத்தியில் டாக்டர் ஜகனைத் தலைவராகக் கொண்ட மந்திரிசபை பதவி ஏற்று ஆட்சியில் அமர்ந்தது. ஆனால் இந்த ஆட்சி நீண்டநாள் நீடிக்கப்படவில்லை. தாங்கள் தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளில் சிலவற்றை நிறைவேற்ற எண்ணும்போது இங்கிலாந்திலிருந்து தடையுத்திரவு பிறந்தது. பிரிட்டிஷ் கயானாவின் அரசியல் சட்டம் நிறுத்திவைக்கப்பட்டு மந்திரிசபை கலைக்கப் படவேண்டும் என்று கட்டளை பிறந்தது.

1953-ம் ஆண்டு அக்டோபர் 6-ம் நாள் ஒலிபரப்பி மூலம் ஒரு செய்தி அறிவிக்கப்பட்டது.

“பிரிட்டிஷ் கயானாவில் கம்யூனிஸ்ட் தொடர்பு கொண்டு, சில மந்திரிகள் உள்பட, செய்யும் சதியாலோசனைகள், குடியேற்ற நாட்டின் நலத்திற்கும் ஆட்சிக்கும் ஊறுதேடும் வகையில் அமைவதாகத் தெரிகிறது. இந்த நிலைமை தடுக்கப்படாவிட்டால் உலகின் சில பாகங்களில் ஏற்பட்டதைப்போன்று ஒரு கம்யூனிஸ்ட் நாடாக மாற்ற முயற்சி நடைபெறக்கூடும். இது ரத்தக் களரிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும். அண்மையில் ஏற்பட்டிருக்கிற சூழ்நிலையைக் கவனிக்கும்போது பிரிட்டிஷ் கயானாவுக்கு கடல், இராணுவப் படைகளை அனுப்பி அமைதியைப் பாதுகாப்பது முக்கியமென அரசாங்கம் கருதுகிறது.”

இச்செய்தி வந்த மூன்றுநாள் கழித்து 9-ம் தேதி மற்றொரு செய்தி ஒலிபரப்பப்பட்டது.

“கம்யூனிச ஆட்சி ஏற்பட்டு, நாட்டு அமைதிக்கும் பொருளாதாரப் பிணைப்புக்கும் ஒரு ஆபத்தான நெருக்கடியைத்தவிர்க்கும் விதமாகப், பிரிட்டிஷ் அரசாங்கம், பிரிட்டிஷ் கயானாவில் நடைபெற்றுவரும் அரசியல் சட்டத்தை நிறுத்திவைக்க உத்தேசித்துள்ளது.”

பிரிட்டிஷ் படைகள் கயானாவில் வந்திறங்கின. மந்திரிசபை கலைக்கப்பட்டுக் கவர்னர் ஆட்சிப் பொறுப்பேற்றார். எல்லாக் கூட்டங்களும் தடை செய்யப்பட்டன. கழகப் பணிமனைகள் சோதனையிடப்பட்டன. மக்கள் முன்னேற்றக் கழகம் அமைதியான பொதுவேலை நிறுத்தத்திற்கு வேண்டுகோள் விடுத்து, ஒத்துழையாமை யியக்கத்தை ஆரம்பித்து அறப்போர் தொடுத்தது. சர்க்கரைத் தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் தொடங்கினர். அஞ்சல் நிலையத்திலிருந்த சேமிப்புப் பணத்தை மக்கள் பெற்றுக்கொள்ளத் தொடங்கினர். ஆங்கிலப் பொருள்களை வாங்காது சட்டமறுப்பு செய்தனர்.

இங்கிலாந்து பார்லிமெண்டில் லிபரல் கட்சியினர் கேள்விகள் கேட்டனர். தொழிற்கட்சியினர், ஆட்சியாளரின்செயலுக்குத்தக்க காரணங்களை விளக்கக் கோரினர். “சில முக்கிய செய்கை

களிலிருந்து கிடைத்த ஆதாரங்களின் பேரிலேயே இந்த ஆபத்து அறியப்பட்டது.'' என்று தெரிவிக்கப்பட்டு, கயானா பற்றிய குறிப்புகள் வெளியிடப்பட்டு அதன்பேரில் விவாதமும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. டாக்டர் ஜகனும், மக்கள் முன்னேற்றக் கழகத்தலைவர் பர்ன்ஹாமும் இங்கிலாந்துக்கு அழைக்கப்பட்டனர்.

டாக்டர் ஜகனும், பர்ன்ஹாமும் இங்கிலாந்து வந்து சேர்ந்தனர். அக்டோபர் 20-ல் மக்கள் சபையில் கயானாவிவாதம்எடுத்து கொள்ளப்பட்டது. அரசாங்கம் வெளியிட்ட அறிக்கையில் கயானாத் தலைவர்கள் மீதிருந்த குற்றச்சாட்டுகள் கூறப்பட்டிருந்தன. அவைகளில் முக்கியமானவை.

1. அரசியல் முடிவைக்காண வேலைநிறுத்தங்களைத் தூண்டினர்.
2. தொழிற்சங்கங்களை சட்டபூர்வமாகக் கலைக்கமுயற்சித்தனர்.
3. கிழக்கிந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கினர்.
4. விரும்பத்தகாத நூல்களை நாட்டில் உலவவிடாதுதடுக்கும் முறைகளைச்,சட்டம் மூலம் நீக்கிக் கம்யூனிசப் பிரசுரங்களை வரவழைத்தனர்.
5. இனப் பாகுபாட்டை வளர்த்தனர்.
6. அரசியல் நோக்கத்தோடு மாதாகோயில் பள்ளிகளையும் பாடபுத்தகங்களையும் மாற்ற முயன்றனர்.
7. ஆட்சி செய்யும் கடமையைப் புறக்கணித்தனர்.
8. கவர்னரின் போலீஸ் படையை மதியாது மக்களின் போலீஸ் படையை அமைக்கப் போவதாக அறிவித்தனர்.
9. பலாத்காரத்தைத்தூண்டினர்.

டாக்டர் ஜகனைத் தொழிற்கட்சித் தலைவர்கள் சந்தித்தபோது மேற்கூறிய குற்றச்சாட்டுகளை மறுத்தார். தங்கள் கழகம் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்ததல்லவென்றும், இங்கிலாந்து தொழிற்கட்சியைப் போன்றதொரு கழகமேயாகும் என்றும் தெரிவித்தார். மக்கள் சபையில் வீற்றிருந்த தொழிற் கட்சியினர் அரசாங்கத்தின் போக்கைக் கண்டித்து ஒரு தீர்மானம் கொண்டு வந்தனர். "கயானாவில் உள்ள சூழ்நிலை அரசியல் சட்டத்தை நிறுத்திவைக்க வேண்டிய அளவுக்கு வளர்ந்திருக்கவில்லை'' என்று வாதாடினார்கள்.

குடியேற்ற நாடுகளின் செயலாளரான **ஆலிவர் லிட்டெல்டன்** அரசாங்கத்தின் நடவடிக்கை நன்கு ஆராய்ந்து செய்யப்பட்டதேயாகும் என்று நீண்டதொரு வாதம் புரிந்தார். முடிவாகத் தொழிற்கட்சியினரின் தீர்

மானம் வோட்டுக்கு விடப்பட்டு, 38 வோட்டுகள் அதிகமாகப் பெற்று அரசாங்கம் வெற்றியடைந்தது.

டாக்டர் ஜகன் எதிர்பார்த்தபடி எவரிடமிருந்தும் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. லிபரல் கட்சியும் தொழிற்கட்சியும் அரசாங்கத்தின் நடவடிக்கை அளவுக்கும் மீறியது என்று கூறினவே தவிர அடாதது என்று வாதிடவில்லை. எல்லோரும் டாக்டர் ஜகனை கம்யூனிஸ்ட் என்றோ கம்யூனிஸ்டுகளால் ஏமாற்றப்பட்டவர் என்றோ கூறாமல் இல்லை.

டாக்டர் ஜகன் இந்தியப் பார்லிமெண்டில் பேச அனுமதி கேட்டார். அது மறுக்கப்பட்டதென்றாலும் அவரது கருத்தை இந்தியர்களிடம் தனிப்பட்ட முறையில் தெரிவிக்கலாம் என்று அறிவித்து அழைப்பு விடுத்தது. அதன்பேரில் டாக்டர் ஜகன் சென்ற ஆண்டு நவம்பர் திங்களில் பதினைந்து நாட்கள்வரை இந்தியாவில் தங்கிப் பல இடங்களில் தனது கருத்தை வெளியிட்டு ஆங்கிலேயர் இழைக்கும் கொடுமையைத் தெரிவித்தார்.

தற்போது ஜகன் கயானாவில் அரசியலாரின் கண்காணிப்பில் இருக்கிறார். டாக்டர் ஜகன் இளவயதிலேயே ஒரு பெரிய கிளர்ச்சிக்குத் தலைவனாகி, நாட்டில் உலவிய பல்வேறு சக்திகளையும் பிணைத்து உரிமைப்போர் கிளப்பிய சிறந்த அரசியல்வாதியாகும். டாக்டர் ஜகன் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல என்பதை நிரூபிக்க கடைசிவரை பிரிட்டிஷ் கயானாவில் நிலவிய அமைதியே போதிய சான்றாகும். அறப்போரில் இன்னும் நம்பிக்கையிழக்காதிருப்பவர் டாக்டர் ஜகன்.

கம்யூனிசக் கொள்கைகள் ஒரு குறிப்பிட்ட இனத்தாரின், குறிப்பிட்ட நாட்டின் ஏகபோக சொத்தல்ல. எங்கே வறுமையில் வாடிடும் மக்களும் அவர்களை உருவாக்கும் உல்லாசபுரியினரும் வாழ்கின்றனரோ அங்கெல்லாம் புரட்சிக்கருத்துக்கள் மலரத்தான் செய்யும். இதைக்கொண்டே ஒரு நாடு கம்யூனிஸ்டுகளோடு தொடர்பு கொண்டிருக்கிறது என்ற முடிவு காண்பது தவறாகும்.

"மன்றம்"

# அரசாங்கப் பொருளாதாரம்

ஏ. இருதயராஜ், *திருச்சி செண்ட் ஜோசப் கல்லூரிப் பேராசிரியர்.*

மனிதன் எவ்வாறு இலாபகரமான முறையில் பொருளீட்டுகிறான், அதை எப்படி சிக்கனமான வழியிலும் பயன்பெறும் வகையிலும் செலவழிக்கிறான் என்பதைப் பற்றிக் கூறுவதே பொருளாதார நூல். அவன் அன்றாட வாழ்க்கையில் செல்வத்தைச் சேர்ப்பதற்காக எடுக்கும் முயற்சிகள், அப்படிச் சேர்த்த செல்வத்தைப் பயன்படும் முறையில் செலவு செய்யும் வழிகள்— இவைகளே பொருளாதாரப் பிரச்னைகள்.

எப்படி ஒரு ராஜ்யத்தில் அரசாங்கமானது பொருள் திரட்டுகிறது, அப்பொருளை எவ்வாறு மக்களுக்குப் பயன்படும் விதத்தில் செலவிடுகிறது என்பதைப் பற்றி ஆராய்வது அரசாங்கப் பொருளாதாரம்.

### குடும்பமும் அரசாங்கமும் :

குடும்ப பரிபாலனமும் இராஜ்ய பரிபாலனமும் ஏறக்குறைய ஒன்றேதான். இரண்டிலும் வருவாய்க்கு அடங்கியே இருக்க வேண்டும் செலவினங்கள். வருவாய்க்கு மீறி செலவானால், குடும்பத்துக்கு எப்படிக் கடன் ஏற்படுகிறதோ, அதுபோலவே, அரசாங்கமும் கடன் வாங்க நேரிடலாம். குடும்பங்களில் அனுவசியமான செலவுகளால் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாமற் போவது போல இராஜ்ய பரிபாலனத்திலேயும் யுத்த காரியங்களுக்காகவும், நாட்டுக்குத் தேவையில்லாத உருப்படாத திட்டங்களுக்காகவும் ஏராளமாக பொருள் செலவிடப்பட்டால், மக்களின் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்வது கஷ்டம். ஊதாரித்தனமான செலவு ஒரு குடும்பம் சீர்குலையக் காரணமாய் இருப்பதைப்போல், ஒரு அரசாங்கம் மக்களின் நன்மையை உதாசீனம் செய்து பணத்தை விரயமாக்கினால், வளமான நாடுங்கூட சுடுகாடாகும்.

ஒரு குடும்பத் தலைவன் தனது வருவாய்க்குத் தக்கபடி செலவுகளைக் கூட்டியோ குறைத்தோ செய்கிறான். குறைந்த வருவாய் உள்ள ஒருவன் சிக்கனமாகச் செலவிடுகிறான். வருவாய் உயர்ந்தால் அதற்குத் தக்காற்போல் தன் குடும்பத்துக்கு அதுவரை கிடைக்காத சில சவுகரியங்களைப் பெறும் விதத்தில் தாராளமாகச் செலவு செய்கிறான். குடும்பச் செலவுக்கு எவ்வளவு பணம் தேவையென்று முதலில் கணக்குப் பார்த்துக் கொண்டு அதன்படி எவனும் வருவாய் தேடுவது கிடையாது. அதாவது குடும்பத்தைப் பொறுத்தமட்டில் வருவாய்தான் செலவை நிர்ணயிக்கிறது.

ஆனால், ஒரு அரசாங்கம் மக்களுக்குத் தேவைப்படும் நன்மை

களைச் செய்து தருவதற்கு என்ன செலவாகும் என்று முதலில் கணக்குப் பார்த்து, பிறகுதான் அத் தொகைகள் வரி மூலமாகவோ அல்லது மற்ற வழிகளிலோ பெறுவதற்குத் திட்டம் தீட்டுகிறது. ஆகவே அரசாங்கத்தின் செலவைப் பொறுத்திருக்கிறது, அதன் வருவாய் திரட்டும் திட்டம்.

ஆனால், சில சமயங்களில் வருவாய்—செலவைக் கட்டுப்படுத்தும் நிலைமையும் ஒரு அரசாங்கத்துக்கு நேரலாம். உதாரணமாக விவசாயமே முக்கிய தொழிலாகக்கொண்ட ஒரு நாட்டில் மழையின்மையாலோ மற்றெந்தக் காரணத்தாலோ பஞ்சம் அல்லது விளைவுக் குறைச்சல் ஏற்பட்டு, மக்கள் அவதிக்குட்பட்டிருந்தால் அதிக வரிகளைச்சுமத்தி அவர்களிடமிருந்து பொருள் திரட்டமுடியாத காரணத்தால், அரசாங்கமும் குறுகிய வருவாய்க்குத் தக்கபடி செலவைக் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகும்.

அதுபோலவே, சில சமயங்களில் ஒரு குடும்பத்திலும் செலவைப் பொறுத்து வருவாயைக் கூட்டவோ அல்லது குறைக்கவோ நேரிடலாம். உதாரணமாக, ஒருவன், தான் கல்யாணமாகாததற்குமுன் சொற்ப வருமானத்தைக்கொண்டு திருப்தியடைகிறான். ஆனால், அதே மனிதன், கல்யாணமானபின், குடும்பம் ஒன்று ஏற்பட்டு செலவு அதிகரிக்கக் கண்டு, முன்னைவிட அதிக நேரம் உழைத்தோ, ஓய்வு நேரங்களில்வேறு ஒரு வேலையை மேற்கொண்டோ, செலவுக்குத் தக்கபடி தன் வருவாயை கூட்டிக் கொள்கிறான்.

வருவாய்க்குமேல் செலவுசெய்யும் ஒரு அரசாங்கம், ஒரு குடும்பத்தைப்போலவே கடன் வாங்க நேரிடும். கடனால் ஒரு குடும்பம் நொடித்துப் போய்விடக்கூடும். அதனால் குடும்பத் தலைவன் கடன் வாங்குவதைத் தவிர்க்க வேண்டும். ஆனால், வியாபாரம், தொழில்முதலிய காரியங்களுக்கு வருமானத்தைப் பெருக்க வசதி செய்துகொள்ள கடன்கள் வாங்குவதால் கெடுதலில்லை.

ஒரு அரசாங்கம் கடன் வாங்காமலே இருப்பது கடினம். அவ்விதம் கடன் வாங்குவதால் கெடுதலும் இல்லை. ஏனென்றால், கடன் வாங்குவதன் மூலம்தான் சில சமயங்களில் ஒரு அரசாங்கம் நீர்ப்பாசனம் போன்ற பெரிய திட்டங்களை உருவாக்க முடியும். அந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதன் மூலம் நாட்டில் செல்வம் அதிகரிக்கச்செய்ய முடியும். எப்பொழுதுமே வரிப் பணத்தைக்கொண்டே எல்லா காரியங்களையும் சாதித்துவிட முடியாது ஒரு அரசாங்கம்.

ஒருவன் தன் வருமானத்திலிருந்து குடும்பத்தேவைகளுக்காக செலவிடும்பொழுது, அந்தச் செலவினங்கள் ஒவ்வொன்றிலுமிருந்தும் ஏறக்குறைய ஏற்றத்தாழ்வின்றி ஓரேவிதமான பயு

னும் மொத்தத்தில் எவ்வளவு அதிகமான பிரயோஜனம் அடையலாமோ அதைப் பெற விரும்புகிறான். குறைந்த வருவாய் உள்ள ஒருவன் முதலில் உடுப்புகளுக்காக அதிகப் பணம் செலவிட்டுவிட்டு உணவுக்குப் போதிய அளவு பணம் இல்லாமல் அவதிப்படுகிறான். பிறகு தன் போக்கைத் திருத்திக் கொண்டு மேற்கொண்டு உடுப்புகளுக்காக ஒன்றும் செலவிடாமல் உணவுக்காக அதிகம் செலவிடுகிறான்.

அதுபோலவே ஒரு அரசாங்கம் பாதுகாப்புக்காக ராணுவத்திற்கு தேவைக்குமேல் அதிகப் பணம் செலவு செய்தால், மக்களுக்கு அத்தியாவசியத் தேவைகளான வைத்திய வசதி, கல்வி வசதி முதலியவைகளைச் செய்துதர முடியாது. தவறை உணர்ந்து பாதுகாப்புச் செலவைக் குறுக்கிட்டுக்கொண்டு, மக்களின் மற்ற தேவைகளுக்கு அதிகமாக செலவழித்தால் அதிக பயன் பெறமுடியும்.

நடைமுறையில் படாடோப அலங்கார வாழ்க்கையில் அதிகம் செலவிட்டுவிட்டு, உண்ண உணவின்றி அல்லல்படும் குடும்பங்கள் இருப்பதுபோலவே கட்சிக்கட்டுப்பாடு, கட்சித் திட்டம் என்று சொல்லிக்கொண்டு உதவாக்கரையான, மக்களுக்குத் தேவையில்லாத, பல காரியங்களில் பொருளை விரயமாக்கி அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத அரசாங்கங்களும் உண்டு. மக்களுடைய உணவு உடை குடியிருப்பு முதலிய முக்கிய தேவைகளை வருவாய் போதவில்லையென்ற காரணத்தால் பூர்த்தி செய்துதர முடியவில்லை என்று கூறும் அரசாங்கங்கள் ஏராளமான பணத்தை, கதர்த் திட்டம், பிர்க்கா அபிவிருத்தித் திட்டம் முதலிய காரியங்களுக்காக வீணாக்குவதையும் காண்கிறோம்.

ஒருவன் செலவு செய்யும் பொழுது தனக்கும் தன் குடும்பத்துக்கும் அவ்வப்பொழுது ஏற்படும் தேவைகளையே கவனிக்கிறான். சில சமயங்களில் தன் வயது முதிர்ந்து சம்பாதிக்கமுடியாத தள்ளாதகாலத்தில் தனக்கு ஏற்படக்கூடிய தேவைகளுக்காகவும் செலவிடுகிறான். தனக்குப் பின் தன் பிள்ளைகளுடைய சவுகர்யத்தை உத்தேசித்து செலவு செய்பவர்களும் உண்டு. ஆனால் தன்னுடைய மூன்றாவது நாலாவது தலைமுறையில் தோன்றப் போகும் வாரிசுகளுக்காகத் தேடி வைப்பதுமில்லை. அவர்களுக்கு ஏற்படக்கூடிய தேவைகளை நினைத்துக் கவலைப்பட்டு இப்பொழுதே அவைகளைப்பூர்த்திசெய்ய முயற்சிப்பதுமில்லை.

ஆனால் ஒரு அரசாங்கமோ ஒரு குடும்பத்தைவிட, அதிக நிரந்தரமான ஸ்தாபனம். பல்லாண்டுகளுக்குப் பிறகும் மக்களுக்குத் தேவைப்படக் கூடிய காரியங்களை மனதிற்கொண்டு பிற்காலசந்ததிகளின் தேவைகளை

யும் பூர்த்தி செய்யும் வகையில் அரசாங்கம் இப்பொழுது செலவிட வேண்டும்.

## ராஜ்ய பரிபாலனத்தின் நோக்கம்.

அரசாங்கம் மக்களிடமிருந்து வரிகள் மூலமாகவோ பிற வழிகளிலோ பொருளைப் பெற்று அதை எல்லோருக்கும் பயனளிக்கும் விதத்தில் செலவுசெய்ய வேண்டும். வரி வசூலிப்பதனல் மக்களுக்கு அதிக கஷ்டம் நேராமல், வசூலித்த வரிப்பணத்தை நல்ல முறையில் செலவு செய்து சமுதாயத்துக்கு எவ்வளவு அதிக நன்மை செய்யமுடியுமோ அந்த முறையில் பரிபாலனம் நடக்க வேண்டும்.

தேவைக்கு அதிகமாய் வருவாய் உள்ளவர்களிடமிருந்து வரிகளைத் தண்டி அதைக்கொண்டு போதிய வருமானம் இல்லாதவர்களுக்கு வேண்டிய பொது சவுகரியங்களைச் செய்துதர வேண்டியது அரசாங்கத்தின் கடமை. இதைச் சரிவர செய்தால், நாட்டின் செல்வம் பெருகுவதுமட்டுமன்றி, சமுதாயத்தில் செல்வம் சரிவரப் பங்கிடுசெய்யப்படாமல், ஒரு சிலர் பரம்பரைப் பணக்காரர்களாகவும், ஏனைய பெரும்பாலான மக்கள் என்றும் ஏழையாகவே வாழ்வதையும் தவிர்க்கலாம்.

## அரசாங்கத்தின் செலவினங்கள்

அரசாங்கத்தின் செலவினங்களை இருவகையாகப் பிரிக்கலாம். ஒரு தேசத்துக்கு வேண்டிய வெளிநாட்டுப் பாதுகாப்பு, உள்நாட்டில் சமாதானத்தைக் காப்பாற்றுவது முதலானவைகளுக்குச் செலவிடுவது ஒருவகை. மக்களுடைய வாழ்க்கையின் தரத்தையும் சவுகரியத்தையும் அபிவிருத்தி செய்வதற்கான செலவுகள் மற்றொருவகை.

லாபகரமான செலவினங்கள் என்றும் லாபமில்லாதவை என்றுங்கூட ஒரு பாகுபாடு உண்டு. ரயில்வே தபால் முதலியவைகளுக்காக அரசாங்கம் செலவிடும் பொருள் லாபகரமான தொழில் நடத்துவதுபோலாகும். பஞ்சத்தைத் தவிர்க்க ஏராளமான பொருளை சர்க்கார் செலவிடும்போது லாபத்தை எதிர்பார்ப்பதில்லை.

லாபகரமில்லை என்பதற்காக சில செலவினங்களை எப்பொழுதுமே அரசாங்கம் தவிர்த்துவிட முடியாது. பஞ்சத் தடுப்பு, இலவச வைத்தியம், இலவசக் கல்வி முதலிய செலவினங்களால் தொழில்முறையில் லாபம் கிட்டுவதில்லை என்றுதான் சொல்லலாமே தவிர மக்களுக்கு அவைகளால் அபரிமிதமான நன்மை ஏற்படுகிறதென்பதை யாரும் மறுக்கமுடியாது.

நாட்டின் பாதுகாப்புக்காக, சமாதானம், நீதி இவைகளை நிலைநாட்டுவதற்காக, ரஸ்தாக்கள் ரயில்பாதைகள் போடுவதற்காக, கல்வி, வைத்திய, சுகாதார வசதிகள் ஏற்படுத்துவதற்காக, இன்

னும் மின்சார விளக்கு வசதி, குடிதண்ணீர் வினியோகம், முதலிய பொதுக் காரியங்களுக்காக, அரசாங்கம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. மேற் சொன்ன செலவினங்களில் சுகாதாரம், மின்சார விளக்கு வசதி, இலவச ஆரம்பக் கல்வி, வைத்திய உதவி, குடி தண்ணீர் விநியோகம் முதலியவை ஸ்தல ஸ்தாபனங்களாகிய மாவட்ட மன்றங்கள், நகர மன்றங்கள் முதலியவைகளாலேயே மேற்கொள்ளப்படுகின்றன.

அரசாங்கம் நல்ல முறையில் செலவுகளை செய்தால் மக்களுக்குப் பல நன்மைகள் ஏற்படுகின்றன. நீர்ப்பாசனத்திற்காக செலவிடுவது உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் செல்வத்தை அதிகரிக்கும். சுகாதாரம், வைத்தியசாலைகளுக்காக ஏற்படும் செலவுகள் மக்களை திடகாத்திரர்களாகவும், ஆரோக்கிய முள்ளவர்களாகவும் பலசாலிகளாகவும் மாற்றி, விவசாயம் தொழில் துறைகளில் உற்பத்தி பெருக வழி செய்கின்றன. கல்விக்காக செலவிடுவது—முக்கியமாக தொழிற் கல்விக்காக செலவிடுவது மக்களுடைய தொழில் நுட்பத்தையும் திறமையையும் அதிகரிக்கச் செய்கிறது. பாதுகாப்புக்காக ராணுவத்துக்கு செலவிடுவது மக்களைப் பயமின்றி வாழ உதவுகிறது. உள்நாட்டுக் கலவரங்கள் இன்றி போலீஸ் பந்தோபஸ்துடன் சமாதானத்தை நிலை நாட்டுவதற்குச் செலவிடுவது மக்கள் சொத்து சுதந்தரத்துடன் கவலையின்றி வாழ வழி செய்கிறது. ரயில்வே தபால் முதலிய போக்கு வரத்து சாதனங்கள் ஏற்படுத்துவதால் வாணிபம் வளருகிறது. இலவசக் கல்வி, ஏழைகளுக்கு விடுதிகள், இலவச வைத்திய உதவி, ஏழைப் பிள்ளைகளுக்குப் பள்ளியில் இலவச உணவு முதலியவைகளுக்காக ஏற்படும் செலவுகளால் மக்களுக்குப் புத்தி நுட்பமும், தேகாரோக்கியமும் ராஜ்ய விவகாரங்களில் அக்கறையும் நாட்டின் நன்மையிலே நாட்டமும் உண்டாகவும், வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் உதவுகிறது. ஆனால் அனாவசியமாக யுத்த தளவாடங்கள் செய்வது போன்ற செலவினங்களால் நாட்டுக்கோ, நாட்டு மக்களுக்கோ யாதொரு நன்மை ஏற்படுவதில்லை.

சில அரசாங்கங்கள் வேலையில்லாதவர்களுக்குப் படியும், 60 வயதுக்கு மேற்பட்ட வயோதிகர்களுக்கு உபகாரச் சம்பளமும் கொடுத்துதவுகின்றன. இவ்வித செலவினங்கள் **ஒரு குறிப்பிட்ட சிலருக்கே** பயனளிக்கின்றன. இலவச வைத்திய சிகிச்சை இலவசக் கல்வி முதலியவைகள் அரசாங்கத்தாரால் கொடுக்கப்படும் பொழுது மக்களில் **ஒரு பகுதியினர்**— ஏழைகள் — மட்டுமே பயனடைகிறார்கள். இம்மாதிரி செலவினங்களிலிருந்து பணம் படைத்தவர்கள், சொந்த செலவிலேயே வைத்திய சிகிச்சை, கல்வி வசதிகள் செய்து கொள்

ளக் கூடியவர்கள் பயனடைவதில்லை—போக்குவரத்து சாதனங்களுக்காக, நல்ல ரஸ்தாக்கள் முதலியவைகளுக்காக, நாட்டில் சமாதானம் நிலைக்க போலீஸ் பந்தோபஸ்து ஏற்படுத்த அரசாங்கம் செலவிடும் பொழுது ஏழை முதல் **எல்லோரும்** பயன் பெறுகிறார்கள். இன்னும் சொல்ல வேண்டுமானால் செல்வம் படைத்தவர்கள் இவ்வித செலவினங்களால் அதிகம் பயன் பெறுகிறார்கள் என்றே சொல்ல வேண்டும். நல்ல ரஸ்தாக்களிருப்பதால், மோட்டார் வாகனங்கள் வைத்திருக்கும் அவர்கள் தான் நன்மை அடைகிறார்கள். பணம் குவிந்திருக்கும் அவர்களுக்குத்தான்-நாட்டில் கலவரம் இன்றி சொத்துக்கு நஷ்டம் ஏற்படாதபடி, சொத்தே களவு போகாதபடி போலீஸ் பந்தோபஸ்து அவசியம். ஏழைமக்கள்—பாதுகாப்பதற்கு சொத்தோ பணமோ இல்லாதவர்கள், அவ்வளவு நன்மை அடைவதில்லை.

மக்களில் பணமுடையோரிடமிருந்து வரியாகப் பணத்தைப் பெற்று, அதில் பெரும் பகுதியை ஏழை மக்களுக்குப் பயன்படும்படி செலவிடுவதே அரசாங்கத்தின் நோக்கம். ஆனால் வரிப்பளுவை அதிகமாக்க,பணமுடையவர்கள் சரியான கணக்குக் காட்டாமல் சர்க்காரை ஏமாற்றவும், சொத்து விவரங்களைத் தராமல் பணத்தைப் பதுக்கவும் நினைப்பார்கள். மேலும் பலர் சொத்து அதிகம் சேர்ந்தால், வருமானம் அதிகரித்தால் அதனால் வரிப்பளுவும் தாங்கமுடியாமற் போகும் என்று பயந்து பணத்தை சேமித்து வைத்து சொத்து சேகரிப்பதற்குப்பதில் தாராளமாக செலவு செய்யவோ அல்லது பணம் சம்பாதிக்கும் முயற்சியை குறைத்துக் கொள்ளவோ நேரிடும். இவ்வாறு வரிப்பளுவினால் நாட்டில் சேமிப்புக் குறையுமானால், தொழில் துறைகளில் மூலதனம் குறையும். அதனால் தொழில் உற்பத்தி குறையும். அதன் விளைவாக நாட்டின் செல்வமும் குறையும். ஆகவே வரி விதிப்பதிலும் ஒரு முறை வேண்டும். கட்டுப்பாடு அவசியம். முறையின்றி வரிகளைச் சுமத்தினால் ஒரு சில காலத்துக்குத்தான் அது நல்ல வருமானத்தைத் தரும். ஆனால் நாளடைவில் தொழில் உற்பத்தியும் அதனால் மக்களுடைய வருமானமும் குறையுமாதலால் வரி வசூலே பாதிக்கப்படும்.

மிதமாக வரிகளை விதித்து நல்ல வருமானம் உள்ளவர்களுக்கு அதிக கஷ்டமோ, நஷ்டமோ ஏற்படாமல் நடந்தால், வரிவசூல் சுலபமாகவும், அதிகமாகவும் இருக்கும். அதனால் ஏழை மக்களுக்கு நன்மைகள் செய்யவும் ஏதுவாகும். ஆனால் அதை விட்டு ஒரேடியாக அபரிமிதமான வரிகளைச் சுமத்தினால் நாளடைவில் வரி வசூல் விழுந்து போகும்—அதனால் மக்களுக்கு நிரந்தரமான நன்மை செய்ய முடியாது. அவ்வாறு செய்வது

தினம் ஒரு பொன் முட்டை யிட்டுக் கொண்டிருந்த வாத்தை திடீரென்று திரவியம் சேர்க்க நினைத்து வயிற்றைக் கிழித்து விட்ட மதியீனன் செய்லுக்கு ஒப்பாகும்.

## சேவை செய்யும் சர்க்கார்

இரண்டு மூன்று நூற்றாண்டு களுக்கு முன்னால் மேல் நாடு களிலுங் கூட அரசாங்கங்கள் அதிக செலவு செய்ததில்லை. இரண்டாவது உலகப் போர் நடந்த காலத்தில் இங்கிலாந்து அரசாங்கம் ஒரு நாளில் செல வழித்த பணம் பதினைந்தாவது நூற்றாண்டில் அதே அரசாங்கம் இரண்டு மூன்று வருஷங்களுக்கு செலவழிக்கப் போதுமானதா யிருக்கும்! இன்றைக்கு இங்கி லாந்தில் கல்விக்கு மட்டும் ஒரு ஆண்டில் செலவழிக்கப்படும் பணம் பதினைந்தாவது நூற்றாண் டில் அதே அரசாங்கத்தின் ஒரு வருஷ செலவுக்கு ஈடு கட்டி யிருக்கும். இதுபோலவே தற் காலத்தில் எல்லா நாடுகளிலும் அரசாங்கச் செலவுகள் அபரி மிதமாக அதிகரித்துள்ளன.

இதற்குக் காரணம் என்ன? அந்தக் காலத்தில் அரசாங்கங் களுக்கு இப்பொழுது இருப்பது போல் அத்தனை அலுவல்கள் இருந்ததில்லை. அக்கால அரசாங் கங்கள் பாதுகாப்பு, உள்நாட்டு சமாதானம், அதாவது ராணுவம், போலீஸ் இவ்விரண்டு வேலை களையே கவனித்து வந்தன. ஆனால் இக்காலத்தில் அரசாங்கங் கள் இவ்விரு வேலைகளையும் முன் னைவிட அதிக திறமையாகவும் அதிக செலவோடும் கவனித்து வருவதுமல்லாமல், பல புதிய அலுவல்களையும் சமூக சேவை களையும் மேற்கொண்டு விட்டன.

முன்னைய போலீஸ் சர்க்கா ருக்கும் இன்றைய சேவை செய் யும் சர்க்காருக்கும் வித்தியாசம் என்னவென்றால், முன்காலத்தில் அரசாங்கங்கள் மக்களின் சௌ கரியங்களை வெறும் மேற்பார்வை மட்டும் பார்த்து வந்தது. மக்கள் தங்கள் சவுகரியங்களைத்தாமே கவனித்து வந்தார்கள். ஆனால் இப்பொழுதோ வென்றால் சர்க் கார் பல பொது சேவைகளை மேற்கொண்டு நமது முன்னோர் கள் நினைத்துக்கூட பார்த்திராத பல பொது அலுவல்களை செய்ய வேண்டியிருக்கிறது. முன்னைய அரசாங்கங்கள் வெறும் போலீஸ் பரிபாலனத்தைத்தான் செய்தன. இப்பொழுது அவை சேவை செய்யும் சர்க்காராக மாறிவிட் டன. ஒரு ராஜ்யத்தின் அரசாங் கத்தின் திறமை அந்த சர்க்காரின் சேவையைப் பொறுத்தே இப் பொழுது கணக்கிடப்படு கின்றது.

கல்வி, போக்குவரத்து, பொழுது போக்கு வசதிகள், பஞ்சத் தடுப்பு, நோய் தடுப்பு, அணைகள் பாலங்கள் கட்டுதல், நீர்ப்பாசன வசதிகள், மின்சாரம், குடிதண்ணீர் விநியோகம் முத லிய புது அலுவல்கள் மிகவும் ஏராளமான செலவில் கவனிக்கப் பட்டு வருகின்றன. மேலும் இக்

காலத்தில் இவ்வளவு அலுவல்களைச் செய்வதற்கு நிர்வாகச் செலவே ஏராளமாகின்றது. எண்ணற்ற உத்தியோகஸ்தர்களும், எழுத்தாளர்களும், வரி விதிப்பவர்களும் தண்டுபவர்களும் நீர்ப்பாசன முதலிய ஆக்க வேலைகளைச் செய்வதற்கு தொழில் நிபுணர்களும் சம்பளம் பெறுகிறார்கள்.

இத்துடன் கூட தற்காலத்தில் ஜனநாயக ஆட்சியே அரசாங்கத்துக்கு அதிக செலவை உண்டாக்குகிறது. ஜனநாயகங்களில் அடிக்கடி பிரதிநிதிகள் தேர்தல்கள் பெருத்த செலவில் நடத்தப்படுகின்றன. மேலும் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளுக்கு சம்பளமோ அல்லது படியோ கொடுத்தாக வேண்டும். இந்தியாவில் மத்திய அரசாங்கத்தில் பார்லிமென்றத்திலுள்ள அங்கத்தினர்களுக்கு மட்டும் தினப்படி ரூ. 30,000 செலவாகிறது.

இம்மாதிரியான செலவுகள் பண்டைக் காலத்தில் அரசாங்கங்களுக்குக் கிடையா. அதனாலேயே தற்காலத்தில் அரசாங்கச் செலவுகள் அதிகரித்து விட்டன.

## ராஜ்யத்தின் வருமானங்கள்

அரசாங்கத்துக்குப் பல வழிகளில் வருமானங்கள் கிடைக்கின்றன. காடுகள், சுரங்கங்கள், மீன் குத்தகை முதலியவைகளிலிருந்தும், தபால் தந்தி, போக்குவரத்து முதலியன போன்ற தொழில்களைப் போட்டியின்றி நடத்துவதன் மூலம் கிடைக்கும் வருவாயும், பத்திரங்களைப் பதிவு செய்வதற்குண்டான கட்டணங்கள் மூலமும், யுத்தம் போன்ற நெருக்கடியான காலங்களில் கிடைக்கும் நன்கொடை போன்றவழிகளிலும்போரிட்டுத் தோல்வியுற்ற நாடுகளிடமிருந்து நஷ்ட ஈடு, கப்பல் மூலமாகவும், நீதி மன்றங்களில் குற்றம் செய்பவர்களிடமிருந்து தண்டப்படும் அபகாரங்கள் மூலமும் வருமானம் கிடைக்கிறது. மேற்சொன்னவைகளைத் தவிர வருமானத்திற்கு மற்றொருவழி, வரி விதிப்பதன் மூலம்.

மேலும் வருமானத்திற்காக அரசாங்கம் சில தொழில்களைத் தானே எடுத்து நடத்தலாம்—ரஷியாவில் அரசாங்கமே எல்லாத் தொழில்களையும் தானே நடத்துகிறது. இங்கிலாந்தில் இரும்பு நிலக்கரி உற்பத்தி தொழில்கள் சர்க்காராலேயே நடத்தப்படுகின்றன.

முன் காலங்களிலெல்லாம் மன்னர்கள் யதேச்சாதிகாரமாய் நடந்து வந்தபொழுது பணக்காரர்களிடமிருந்து கட்டாயமாய் பணம் பறித்தும் வருமானத்தைப் பெருக்கிக் கொண்டனர். இங்கிலாந்தில் ஏழாவது ஹென்றி முதலிய மன்னர்கள் ஆண்ட காலத்தில் இம்மாதிரி அக்கிரமமாய்ப்பணம்வசூலிப்பது வழக்கம். முதலாவது ரிச்சர்ட் என்ற மன்னன் தனக்குப் பணம் தேவைப்படும் பொழுது ஏதாவதொரு நகரத்

துக்கு ஒரு தொகையைப் பெற்றுக்கொண்டு சாஸனம் எழுதிக் கொடுத்துவிட்டு, அந்த நகரில் சுங்கவரி முதலியவைகளைத் தண்டும் உரிமையை விடுவது வழக்கம். ஒரு சமயம் ஒரு யுத்தத்துக்குப் பணம் இல்லாத நேரத்தில், லண்டன்மா நகரத்தையே வாங்குவதற்கு ஆள் இருந்தால் விற்றுவிடத் தயார் என்று சொன்னதாகச் சரித்திரம் சொல்லுகிறது.

தற்காலத்தில் ஜனநாயக ஆட்சிகளில் மேற்சொன்ன யதேச்சாதிகார வருமானம் தேடும் முறைகள் கையாளப்படுவதில்லை. சில சமயங்களில் பண நெருக்கடி ஏற்படும் போது, அரசாங்கங்கள் கரன்ஸி நோட்டுகளை அச்சடித்துக் கொள்வதுமுண்டு. ஆனால் அத்து மீறி தேவைக்கு மேல் நோட்டுகளை அச்சடித்து வினியோகித்தால் நாட்டில் பணப் பெருக்கம் ஏற்பட்டு விலைவாசிகள் உயரும்.

வருமானத்துக்கு வேறு வழியில்லாவிட்டால், அரசாங்கத்துக்குக்கடைசி வழிகடன் வாங்குவதாகும்—ஆனால் கடன் வாங்குவதிலும் ஒரு முறைவேண்டும். லாபகரமான செலவினங்கள்—அதாவது லாபந்தரக் கூடிய திட்டங்களை உருவாக்கவும், நாளடைவில் வாங்கிய கடனை தீர்க்கக் கூடிய சக்தி இருந்தால் மட்டும் கடன் வாங்குவது நல்லது.

## வரி விதிப்பு

அரசாங்கத்தின் வருமானத்துக்கு முக்கியமான வழி வரி விதிப்பது. வரி என்பது ஒரு பிரஜையின் வேலை, வியாபாரம், சொத்து, வருமானம் இவைகளின் பேரில் சர்க்காரால் விதிக்கப்பட்டு கட்டாயமாக வசூலிக்கப்படும் கட்டணம். வரிசெலுத்திய வரிக்குத் தக்க நேரடியான பலன்களை எதிர்பார்க்க முடியாது.

எல்லா மக்களுக்கும் வேண்டிய வசதிகளை சர்க்கார் செய்து தருவதற்காக இக்கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதனால் ஒருவரும் தான் வரி கட்டுவதனால் அவசியம் தனக்கு ஒரு நன்மையை அரசாங்கம் செய்து தான்தர வேண்டுமென்று வற்புறுத்த முடியாது. இவ்வளவு பலன் கிடைக்க வேண்டுமென்று யாரும் வற்புறுத்த முடியாது. அது போலவே எனக்கு சர்க்காரிடமிருந்து யாதொரு சலுகையும் கிடையாது. அதனால் நான் வரி செலுத்த முடியாது என்று வாதாடுவதற்கும் இடமில்லை.

## வரி விதிப்பு விதிகள் :

முதலாவதாக ஒரு ராஜ்யத்தின் பிரஜைகளிடமிருந்து, ராஜ்ய நிர்வாகம் சரிவர நடைபெற அவரவர்களுடைய சக்திக்குத் தக்கவாறு அதாவது அவரவருடைய வருமானத்திற்குத் தக்கவாறு வரி தண்ட வேண்டும். வரி செலுத்துவதால் ஏற்படும் கஷ்டம் எல்லோருக்கும் ஒரே மாதிரி இருக்கவேண்டும். அதிக வருமானம் உள்ளவர்கள் அதிக வரி கொடுக்கக்கூடிய சக்தி பெற்

றவர்கள். 1000 ரூபாய் சம்பளம் வாங்கும் ஒருவர் வரி செலுத்துவதால் எவ்வளவு சிரமம் அடைகிறரோ அதைவிட அதிக சிரமம் இருக்கக்கூடாது 100 ரூ. சம்பளம் வாங்குபவர் வரி செலுத்தும் போது.

இரண்டாவதாக ஒவ்வொரு பிரஜையும் செலுத்த வேண்டிய வரித்தொகை, எவ்வளவு எப்பொழுது எப்படி செலுத்த வேண்டும் என்பது அவனுக்கு மட்டுமல்ல எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்திருக்கவேண்டும். இல்லாவிடில் வரி தண்டும் அதிகாரிகளால் மக்களுக்கு அநாவசியமாக உபத்திரவம் ஏற்படும்.

மூன்ருவதாக வரி வசூலிப்பது மக்களுக்கு சிரமமில்லாத வகையில்; அவர்கள் இலகுவாகக் கொடுக்கக்கூடிய சமயத்தில் வசூலிக்கப்பட வேண்டும். விவசாயிகளுக்கு விதித்திருக்கும் வரியை அறுவடைகாலத்தில் வசூலிக்கவேண்டும். அதுவுங்கூட நிலவரியை ஒரேயடியாக வசூலிப்பதைவிட மூன்று அல்லது நான்கு தவணைகளில் வசூலிப்பது நல்லது. சென்னை ராஜ்யத்தில் அப்படித்தான் வசூல் செய்யப்படுகிறது,

நான்காவதாக வரி வசூலிப்பதற்கு அதிகப் பணம் செலவாகக் கூடாது. வரிதண்டுவதற்காக ஏராளமான அதிகாரிகள் நியமிக்கப்பட்டால் அவர்களுடைய சம்பளத்திற்காக வசூலித்த வரியில் பெரும் பகுதி செலவிடப்பட்டு விடும். அதனல் ஒரு பயனுமில்லை.

பொதுவாக ஒரு அரசாங்கத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்க வேண்டும், வரியிலிருந்து கிடைக்கும் வருமானம். மேலும் ஜனத்தொகை பெருகப் பெருக அரசாங்கத்தின் செலவினங்கள் வளருமாதலால் வரித்தொகை வசூலும் தானகவே பெருகக்கூடியதாயிருக்கவேண்டும்.

இருபதாவது நூற்றுண்டில் வாழும் நமக்கு மேலே சொன்ன நியதிகள் சர்வ சாதாரணமாகத் தோன்றலாம். ஆனல் முன் காலங்களிலெல்லாம் மன்னர்கள் முறை தவறியும்,மக்கள் சக்திக்கு மீறியும் வரி வசூலிப்பதும், வசூல் செய்யும் அதிகாரிகள் முரட்டுத்தனமாயும் மிருகத்தனமாயும் மக்களிடம் நடந்து கொள்வதும், வசூலித்த பணத்தில் பெரும் பகுதியை வசூலித்தவர்களே அபகரித்துக் கொள்வதுமே சர்வ சாதாரணமாக இருந்தன.

மேற்சொன்ன விதிகளைத் தவிர, நடைமுறையில் கவனிக்க வேண்டிய சில காரியங்களும் இருக்கின்றன. வரி விதிப்பைப் பற்றிய சகல விவரங்களும் மக்களுக்குப் புரியும் விதத்தில் இலகுவாகவும் எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய விதத்திலும் தெளிவாக இருக்கவேண்டும். அப்படியில்லாமல் அர்த்த பேதங்களுண்டாகும் விதத்திலும் அதைத்

தெளிவு படுத்திக்கொள்ள ஒரு வக்கீலையோ அல்லது மற்றெவரையோ நியமிக்க வேண்டிய தொல்லை ஏற்படக்கூடாது.

அரசாங்கம் விதிக்கும் வரிகளில் சிலவாவது வேண்டும் பொழுது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ள ஏதுவானதாக இருக்க வேண்டும். அப்படி வருமானத்தை அதிகப்படுத்தும் நேரத்தில் வசூல் செய்யும் செலவும் அதிகரிக்கக் கூடாது. நாட்டில் வியாபாரம், தொழில் துறைகளில் செழிப்பு ஏற்படும்போது தானாகவே அதிக வருமானம் கொடுக்கக்கூடிய வரிகள் இருக்கின்றன. உதாரணமாக வருமான வரியை எடுத்துக்கொண்டால் நாட்டில் தொழில் அபிவிருத்தி ஏற்படும்போது அந்த வரியினால் வரும் வருமானமும் தானாகவே உயரும். மேலும் யுத்த நெருக்கடி ஏற்படும் பொழுது வரியை சிறிது உயர்த்தினாலும், ஏராளமான வருமானம் மேற்கொண்டு கிடைக்கும். ஒரு அரசாங்கம் சாமான்களின் மேல் மட்டும் வரி விதித்தால் அது அபாயமாகவே வந்து முடியும். ஏனெனில் நாட்டில் வியாபாரம் தொழில் முதலியவை செழித்திருக்கும் போது ஏராளமான வருமானம் வரும். ஆனால் நாட்டில் செழிப்புக் குறைந்து மக்கள் கஷ்டப்படும் நேரத்தில், அரசாங்கம் அக்கஷ்டத்தைப் போக்க அதிகமாக செலவிடவேண்டும் என்று எதிர்ப்பார்க்கப்படும் நேரத்தில், அந்த வரிகளிலிருந்து வருமானம் குறைந்து போகும்.

கடைசியாக ஒரு அரசாங்கம் குறைந்த வருமானம் கொண்டு வரக்கூடிய பல வரிகளை சுமத்தி மக்களை கஷ்டப்படுத்துவதைவிட நல்ல வருமானம் தரக்கூடிய ஒரு சில வரிகளை மட்டும் விதித்தால் நல்லது.

—"திராவிட நாடு"

# கல்வி விஷயத்தில் மத்ய சர்க்கார் பொறுப்பு ஏற்க வேண்டும்

## அகில இந்தியக் கல்வி மாநாட்டுத் தீர்மானங்கள்

கல்வி பற்றிய பல்வேறு அம்சங்களையும் குறித்தசுமார் 43 தீர்மானங்கள் அண்மையில் பாட்னாவில் கூடிய அகில இந்திய29-வது கல்வி மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. டாக்டர் ஆர். பி. பராஞ்சபே தலைமை வகித்தார். தீர்மானங்களாவன :—

இந்திய யூனியனிலும் குறிப்பாக மேற்கு வங்காளத்திலும் கல்வித் துறையிலும் கல்வியாளருக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளதில் மகாநாடு கவலை கொண்டிருக்கிறது.

மத்திய சர்க்காருக்கும் ராஜ்ய சர்க்கார்களுக்கும் வேறு கொள்கைகள் இல்லாததனாலேயே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. கல்

ராஜ்ய சர்க்கார்களின் வருமானத்தில் 25 சத விகிதமாவது மத்திய சர்க்காரின் வருமானத்தில் 15 சத விகிதமாவது கல்விக்காக ஒதுக்கப்பட வேண்டும். இதில் ராஜ்ய சர்க்கார் செலவில் 50 சத விகிதமாவது மத்திய சர்க்கார் செலவில் 40 சத விகிதமாவது ஆரம்பக் கல்விக்கென ஒதுக்குதல் அவசியம்.

கல்வி சம்பந்தமான கொள்கைகளை நிர்ணயிப்பதில் உபாத்தியாயர்கள் தங்கள் ஸ்தாபனங்கள் மூலம் முக்கியப் பங்கு பெற இடமளிக்க வேண்டும்.

### கல்வி ஸெஸ் விதிக்க யோசனை

ரூ. 1500 க்கு மேல் வருஷ

வேண்டும். ஆரம்பக் கல்வியில் இணைக்கப்பட்டபடி எட்டு வருஷப் படிப்பு இருக்கவேண்டும். எல்லா இடங்களிலும் அடுத்த ஐந்தாண்டுகளில் கட்டாய இலவசக் கல்வியைப் பரப்ப வேண்டும். ஆரம்ப ஆசிரியர்களைக் கொண்டு முதியோர் கல்வியை ஜனநாயக முறையில் அமைக்க வேண்டும்.

இந்த அடிப்படைகளைக் கொண்டு புதிய சட்டங்கள் செய்ய வேண்டும். உள்ள சட்டங்களை இதற்கேற்ப மாற்ற வேண்டும்.

## உபாத்தியாயர்களுக்கு என மத்தியஸ்த போர்டு : இதர வசதிகள்

உபாத்தியாயர்களது உத்தியோகப் பாதுகாப்புக்கும், தகராறுகளைத் தீர்ப்பதற்கும் ஒவ்வொரு ராஜ்யத்திலும் உடனே ஒரு மத்தியஸ்த போர்டு ஏற்படுத்த வேண்டும். இந்த போர்டுக்கு ஒரு நீதிபதியோ அல்லது ஜில்லா ஜட்ஜ் அந்தஸ்துக்குக் குறையாத ஒரு ரிடையர்டு அதிகாரியோ நியமிக்கப்பட்டு கல்வி இலாகா தலைவர், மானேஜ்மெண்டு, உபாத்தியாயர்கள் ஸ்தாபனங்கள் ஆகியோரின் பிரதிநிதியாக மூன்று அஸெஸர்களும் நியமிக்கப்பட வேண்டும். கைத்தொழில் டிரிப்யூனல்போல் இந்த போர்டும் இயங்கச் சட்டம் செய்ய வேண்டும். எல்லா சாட்சிகளையும் தருவித்து விசாரிக்கவும் சம்பந்தப்பட்ட தகவல்களைப் பெறவும், எல்லாத் தகராறுகளையும் தீர்க்கவும் இதற்கு அதிகாரம் அளிக்கப்படவேண்டும்.

ஆரம்ப ஆசிரியர்கள் பிராவிடண்டு பண்டு, வசதி, உபாத்தியாயர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி, உபாத்தியாயர்களுக்கு இலவச வைத்திய வசதி, பிரயாண வசதி முதலியன பற்றிய மத்திய தரக் கல்வி கமிஷன் சிபார்சுகளை அமுலாக்க வேண்டும்.

கல்வியின் நலம் கருதி பள்ளிக்கூட நிர்வாகக் கமிட்டிகளில் உபாத்தியாயர்களுக்கு போதிய பிரதிநிதித்வமளிக்க வேண்டும்.

## ஆரம்ப ஆசிரியருக்கு கிராடியூட்டி

ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு வருஷ ஸர்விஸுக்கும் அரையாத சம்பளம் கிராடியூட்டியாக (உயர்ந்தது 15 மாதத்திற்கு) ராஜ்ய சர்க்கார் வருமானத்திலிருந்து ரிடையராகும் போது கொடுக்க வேண்டும்.

## ஆரம்பக் கல்வி பற்றிச் கமிஷன்

பிரதிநிதித்துவம் வாய்ந்த ஒரு கமிஷனை உடனே இந்திய சர்க்கார் நியமிக்கக் கோருகிறது. (1) எல்லா ராஜ்யங்களிலும் ஆரம்பக் கல்வி பற்றி விரிவான பரிசீலனை செய்வது (2) ஆரம்ப ஆசிரியர்கள் நிலைமை பற்றி ஆராய்ந்து தேச முழுவதற்கும் பொதுவான ஒரு சம்பளத் திட்டத்தை வகுப்பது (3) ஆதாரக் கல்வி பற்றிய தகவல்களைச் சேகரிப்பது (4) நிர்வாகம், படிப்புத்

தோராணை,உபாத்தியாயர் தேர்ச்சி ஆகியவற்றில் ஒரு உயர்தரத் திட்டம் தயாரித்தல் (5) இவற்றையெல்லாம் நிறைவேற்ற செல்வ வசதிகளை யோசனை கூறுவது ஆகியவை இக்கமிஷனின் வேலையாக இருக்க வேண்டும்.

ஆரம்ப ஆசிரியர் வேலை வாரத்தில் 30 மணிக்கு மேல் இல்லாமலும், வருஷத்தில் வேலை செய்யும் தினங்கள் 210 க்கு மேற்படாமலும் இருக்குமாறு மத்திய ராஜ்ய சர்க்கார்கள் பார்த்துக் கொள்ள வேண்டும்.

## சட்ட சபையில் பிரதிநிதித்வம்

உபாத்தியாயர்களுக்கு சட்ட சபைகளில் உரிய பிரதிநிதித்துவம் அளிக்க வேண்டும்.

தேர்ச்சிக் காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு முழுச் சம்பளம் அளிக்க வேண்டுமென்ற பம்பாய் மகாநாட்டுக் கோரிக்கையை இம் மகாநாடு ஆதரிப்பதுடன் அவர்களுக்குப் புஸ்தகங்கள் வாங்கவும் தேர்ச்சி சம்பளம் கட்டவும் தக்க அலவன்ஸை அளிக்கும்படியும் கேட்டுக் கொள்கிறது.

## குறைந்த பக்ஷ சம்பளக் கோரிக்கை

ஆரம்ப ஆசிரியர்களிடையே பல வேறு பிரிவினருக்கும் பின் வரும் சம்பள விகிதத்தை ஏற்கும்படி மகாநாடு சிபார்சு செய்கிறது.

மெட்ரிகுலேட் உதவி ஆசிரியர்கள் (தேர்ச்சியில்லாதவர்) ரூ. 60-4-80-5-7-170.

மெட்ரிகுலேட் உதவி ஆசிரியர்கள் (தேர்ச்சி பெற்றவர்கள்) மெட்ரிகுலேட் தலைமை ஆசிரியர் (தேர்ச்சி பெறாதவர்) ரூ. 80-5-100-7-170 முதல் 200 வரையில்.

தலைமை ஆசிரியர் (மெட்ரிகுலேட் தேர்ச்சி பெற்றவர்) ரூ. 80-5-100-7-170-10-220.

இதைவிட அதிக யோக்கியதை பெற்றவர்களான பட்டதாரிகள் அல்லது பட்டம் பெறாதவர்கள் (தேர்ச்சி பெற்றவராயினும் இல்லாவிடினும்) ஆரம்பப் பாடசாலைகளில் வேலை செய்தால் இதே யோக்கியதையுள்ள செகண்டரி உபாத்தியாயர்களுக்கு என்ன சம்பளம அளிக்கப்படுகிறதோ அதை இவர்களுக்கும் அளிக்க வேண்டும். அதாவது :—

தேர்ச்சி பெற்றபட்டதாரிகள்: ரூ. 150-10-250-15-400.

தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளல்லாதவர்கள், தேர்ச்சி பெறாத பட்டதாரிகள்:—ரூ. 125-8-205-12-325.

தேர்ச்சி பெறாத பட்டதாரிகள் அல்லாதவர்கள் :—ரூ. 100-6-160-10-260.

மத்திய சர்க்காரில் இதே சம்பளம் வாங்குவோருக்கு என்ன கிராக்கிப்படி அளிக்கப்படுகிறதோ, அதே கிராக்கிப்படி உபாத்தியாயர்களுக்கும் அளிக்கப்படவேண்டும்.

(சு. மி.)

# பெரியகுளம் தாலுக்கா ஆரம்ப ஆசிரியர்கள் மகாநாடு

போடிநாயக்கனூர் (12–2–55)

ஆரம்பக்கல்வி ஆசிரியர் :

P. *வீரராகவன்*

அவர்கள் ஆற்றிய

# சொற்பொழிவு

★

*ஆர்வமும் ஆற்றலும் மிக்க மாநாட்டுத் தலைவர் அவர்களே! அலை அலையாகத் திரண்டு குழுமியுள்ள ஆசிரியத் தோழர்களே! பேரன்பு கெழுமிய பெரியோர்களே!*

*உங்கள் அனைவர்க்கும் என் அன்பு நிறைந்த வணக்கம்.*

*ஆரம்பக் கல்வியைப் பற்றிய பல நெருக்கடியான பிரச்சினைகள் நாட்டில் அலைமோதிக் கொண்டிருக்கிற இந்த முக்கியமான நேரத்தில் இத்தகைய மாநாடு கூடுவது மிகவும் பொருத்தமானதோர் நிகழ்ச்சி என்றே நான் கருதுகிறேன். தருணமறிந்து இத்தகைய நற்செயல் புரிந்த மாநாட்டு நிர்வாகிகளை நான் மனமாறப் பாராட்டுகிறேன்.*

*ஆரம்பக் கல்வியா—அது மிக மிக அவசியமாயிற்றே என்று இன்றைய தினம் பேசாதவர்கள் யாரும் இல்லை. அரசியல் தலைவர் களாகட்டும், அரசாங்க அதிகாரிகளாகட்டும், நாடாளும் நாயகர்களா கட்டும், நாட்டின் நலன் நாடும் நல்லறிவாளராகட்டும், பேசுகின்ற இடம் எதுவாக இருந்தாலும், ஆரம்பக் கல்வியின் சிறப்பு—அதனை நாட்டு மக்கள் அத்தனைப் பேரும் பெற்றாக வேண்டிய தன் அவசியம் —அப்படிப் பெறாததால் ஏற்படக்கூடிய கேடுகள்—அதனைப் பெற்றி ருக்கிற நாடுகள் உற்றிருக்கிற பெருமை ஆகியவற்றைப் பற்றி வீர*

முழக்கம் எழுப்பாமல் இருப்பதில்லை. உண்மையாகவே சொல்கிறேன். நாட்டு மக்கள் அத்தனைப் பேராலும் கூர்ந்து கவனிக்கப் படுகிற பெருமையும் சிறப்பும் மிகுந்த பெரியதோர் பிரச்சினையாகி விட்டது ஆரம்பக் கல்வி, இன்றையதினம்.

ஒரு காலம் இருந்தது—கல்வி என்ற பேச்சை எடுத்தாலே, மக்களில் மிகப் பலர் கை கொட்டிச் சிரித்த காலம். படிப்பாம் படிப்பு, படித்தவரெல்லாம் என்னத்தைச் சாதித்து விட்டான் என்று கேலி பேசிக் கெக்கலி கொட்டிய வேளை. பள்ளிக்கூடம் போவது பயனற்ற செயல் என்றும், ஏடுகளைப் படிப்பது ஏமாளிகளின் தொழில் என்றும் கருதப்பட்ட நேரம். அந்தக் காலமும் நேரமும் மண்ணாகி மாண்டு மடிந்து விட்டன. இன்றைய தினம், ஏழை விவசாயி சின்னஞ் சிறு குமாஸ்தா, வாடித் துடிக்கும் தொழிலாளி, கைவண்டி இழுக்கும் பாட்டாளி, கூடை சுமக்கும் மூதாட்டி—அத்தனைப் பேருமே கல்வியின் வளர்ச்சியே நாட்டின் வளர்ச்சி என்கிற உண்மையைத் தெள்ளத் தெளிவாக அறிந்து கொண்டிருக்கிறார்கள்.

மிக மிக மகிழ்கிறேன் இந்த அறிவுத் தெளிவைக் கண்டு! மகிழத்தானே வேண்டும்! மகிழ்வதுதானே முறை! எனவே மகிழ்கிறேன். ஆனால் மகிழ்ச்சி, மனக் கலக்கமாக மாறிவிடுகிறது மறு விநாடியிலேயே! ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியைப் பற்றி அத்தனைப் பேரும் ஆர்வத்தோடு பேசுகிறார்களே தவிர அத்தகு கல்வியை ஊட்டி வரும் ஆரம்ப ஆசிரியர்களைப் பற்றி—அவர்களுடைய ஊதியம் கிடுகிடு பாதாளத்திற்குக் கீழேயும் வீழ்ந்து கிடப்பதைப் பற்றி,—அப்படி விழுந்து கிடப்பதாலே விஷம் போல ஏறிக் கிடக்கும் விலைவாசிகளைத் தாங்க முடியாமல் அவர்கள் அனலிடைப் புழுக்களென வாடி வதங்கும் பரிதாபத்தைப் பற்றி யாருமே சிந்தித்ததாகத் தெரியவில்லை.

எழுத்தறிவித்தவனே இறைவன் ஆவான்—சொல்லுகிறார்கள். ஆசிரியத் தொழிலே கண்ணியமான தொழில்—பாராட்டுகிறார்கள். வருங்காலப் பிரஜைகளை உருவாக்கும் நிகழ்காலச் சிற்பிகள்—வர்ணனையை வீசுகிறார்கள். இப்படியெல்லாம் புகழப்படுவதைத் தான் நாம் தினம் தினம் கேட்கிறோமே தவிர, இப்படியெல்லாம் புகழப்படுபவனின் நிலையை உயர்த்த நாங்கள் இன்னின்ன செயல்களைச் செய்

திருக்கிறோம், இன்னின்னவற்றை இனிச் செய்யப் போகிறோம், இன்னின்னவற்றைச் செய்தாலொழிய நாடு நலம் பெறாது என்றெல்லாம் எவரும் பேசக் காணோம். ஆசிரியத் தொழிலை வானளாவ உயர்த்திப் பேசி விட்டு, அதே நேரத்தில், அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு, வயிறார உண்பதற்குக் கூடப் போதாத சம்பளத்தைத் தந்து வருவது, மன்னிக்க முடியாத ஒரு குற்றம் என்றே நான் கருதுகிறேன். என்றைய தினம் ஆசிரிய உலகத்துக்கு இழைக்கப்படும் இந்த அநீதி அழிக்கப்படுகிறதோ, என்றைய தினம் ஆரம்ப ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம் ரூபாய் 75 என்று ஏற்படுகிறதோ, என்றைய தினம் அந்த ஆசிரியத் தோழர்களின் குடும்பங்களிலே குதூகலமும் உள்ளங்களிலே உற்சாகமும் நடமாடத் தொடங்குகின்றதோ, என்றைய தினம் அவர்களுடைய கண்களிலே புது ஒளியும் முகங்களிலே புன்முறுவலும் காணப்படுகிறதோ, அன்றைய தினம்தான் நாட்டுக்கு நற்காலம் பிறக்கும் தினம் என்பது என் அழுத்தந்திருத்தமான கருத்து.

ஆசிரியர்களின் ஊதியத்தை உயர்த்த வேண்டியது எவ்வளவு அவசியமான காரியமோ அதே அளவு அவசியம் நிரம்பிய பணி, கிராமத்திற்கோர் பாடசாலையை ஏற்படுத்துவது. அரசாங்கம், இந்த இரு துறைகளிலேயும், தன் முழு கவனத்தையும் செலுத்தியாக வேண்டும். 250 பேருக்குக் குறையாத மக்கள் தொகை படைத்த ஒவ்வோர் ஊரிலேயும் ஒவ்வோர் ஆரம்பப்பள்ளி இருந்தே தீரவேண்டும் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் இந்தக் காரியம் நிறைவேறிவிட வேண்டும். இந்த அரும்பணியைத் திட்டவட்டமாகச் செய்து முடித்தால்தான், பதினான்கு வயதுக்கு உட்பட்ட எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாய ஆரம்ப இலவசக் கல்வியைத் தந்தாகவேண்டும் என்று அரசியல் திட்டம் தெரிவிக்கிறதே, அந்த அன்புக் கட்டளையை நிறைவேற்றி வைக்கமுடியும்.

இல்லாத ஊர்களிலெல்லாம் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்குவதும், இருக்கும் ஊர்களில் அந்தப் பள்ளிகளின் நிலைமையை உயர்த்துவதும்தான் நம்முடைய முதற்பெரும் கடமைகளாக இருக்க வேண்டுமே தவிர, ஆரம்பப் பள்ளிகளை ஆதாரப் பள்ளிகளாக மாற்றிக் கொண்டிருக்கும் காரியத்தில் நம்முடைய நேரத்தையோ நினைப்பையோ செலவிடுவது, தேவையில்லாத காரியம் மட்டுமல்ல, தீதான

திட்டமும் ஆகும். ஆளுக்கு ஒருவிதமாகவும், வேளைக்கு ஒருவகையாகவும் பேசி வருகிறார்களே தவிர, இன்னதுதான் ஆதாரக் கல்வி என்று திட்டவட்டமாகவும் தெள்ளத் தெளிவாகவும் வரையறுத்துக் கூறியவர்கள் இதுவரை யாரும் இல்லை. மாணவர்களின் படிப்புக்காகச் செலவாகும் பணத்தை மாணவர்களே தேடிக்கொள்வது—அதுவும் அந்தப் படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வதுதான் ஆதாரக்கல்வி என்கிறார்கள் சிலர் படிப்புக்காக ஆகும் செலவைப் படிப்பின் மூலமாகவே தேடிக்கொள்வது என்பது ஒருநாளும் நடக்காத காரியம். இதுவரையில் இந்த மாகாணத்திலும் சரி, வேறு மாகாணங்களிலும் சரி, ஆதாரப் பள்ளிகள் எத்தனையோ தொடங்கப்பட்டிருக்கின்றன. எந்த ஆதாரப் பள்ளியிலாவது, அந்தப் பள்ளிக்கூடத்திற்காகும் செலவு முழுவதையும், அந்தப் பள்ளிக்கூட பிள்ளைகளே அவர்களுடைய கல்வியின் மூலமாகவே தேடித் தந்திருக்கிறார்கள் என்று யாராவது சொல்லமுடியுமா என்று கேட்கிறேன்.

ஆதாரக் கல்வியென்றால் அது அல்ல பொருள். பற்பல தொழில்களில் மாணவர்களை ஈடுபடுத்தி அந்தத் தொழில்கள் மூலமாகக் கல்வியைப் புகட்டுவதுதான் ஆதாரக்கல்வி என்று வேறு சிலர் இயம்புகிறார்கள். இதுதான் ஆதாரக் கல்வியென்றால் இத்தகைய ஆதாரக் கல்வியை ஒழித்தே தீரவேண்டியது நம்முடைய கடமையாகும். சின்னஞ்சிறு பிள்ளைகளை கடின தொழில்களில் ஈடுபடுத்துவது ஜீவகாருண்யமற்ற செயல் என்பது அகில உலகத்தாலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிற உண்மையாகும். இந்தக் கருத்தை முன்வைத்துத்தான், இந்திய அரசாங்கமும், பதினான்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைத் தொழிற்சாலைகளில் வேலைக்கு வைத்துக்கொள்வதைத் தடைசெய்து சட்டம் இயற்றியிருக்கிறது. சின்னஞ்சிறு பிள்ளைகளிடமிருந்து தொழிற்சாலைகளில், தொழில் என்கிற பெயரால், ஊதியம் கொடுத்து வேலை வாங்குவதே குற்றம் என்று ஏற்படுகிறபோது, அதே பிள்ளைகளிடமிருந்து, பள்ளிக்கூடங்களில், கல்வி என்கிற பெயரால், ஊதியம் கொடுக்காமல் வேலை வாங்குவது மட்டும் எப்படி நானிலம் போற்றவேண்டிய நற்பண்பாக மாறிவிடமுடியும்? நான்காவது பாரத்திலும் அதற்கு மேற்பட்ட வகுப்புகளிலும் படிக்கும் பிள்ளைகளுக்குத் தொழிற் கல்வியைப் புகட்டவேண்டியது மிகவும் அவசியமான காரியம். ஆனால் ஆரம்பப்பள்ளி

களில் படிக்கும் அன்றலர்ந்த செந்தாமரைகளுக்கு—ஏழு எட்டு ஒன்பது என்னும் வயதுபடைத்த சின்னஞ்சிறு குழந்தைகளுக்குத் தொழிற் கல்வியைப் புகட்டுவது அர்த்தமற்ற செயல் மட்டுமல்ல, ஆபத்தான காரியமும்கூட. எனவே எந்தக் கண்ணோட்டத்தின்படி பார்த்தாலும் சரி, ஆதாரக்கல்வி என்பது அர்த்தமற்றதோர் சொல்லடுக்கு என்றே ஏற்படுகிறது.

ஆரம்பக் கல்வியைப் பற்றிய மற்ருேர் முக்கியமான பிரச்சினை; ஆரம்பப் பள்ளிகளுக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்குமிடைய இருக்க வேண்டிய உறவைப்பற்றியதாகும். இன்றைய தினம் உள்ள நிலைமையில், ஆரம்பப் பள்ளிக்கூடத்தின் எட்டாவது வகுப்பை முடித்த மாணவர்கள், பெரும்பாலும், உயர்நிலைப் பள்ளியின் ஒன்பதாவது வகுப்பில் அதாவது நான்காவது பாரத்தில், சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை. ஒன்று அல்லது இரண்டு வகுப்புகள் குறைத்தே சேர்த்துக் கொள்ளப்படுகிருர்கள். இதனுல் படித்த வகுப்புகளிலேயே மீண்டும் ஒரு முறை படிக்கவேண்டிய தர்ம சங்கடமான நிலை மாணவர்களுக்கு ஏற்படுகிறது. அதுபோலவே, ஒரே வகுப்புக்காக இரு முறை பணம் செலவழிக்க வேண்டிய வேதனை பெற்ருேர்களுக்கு ஏற்படுகிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் இந்த விபரீதம் மிகுந்த விசித்திர நிலைமையை இனியும் நீடிக்கவிடக்கூடாது அரசாங்கம். 6, 7, 8 வகுப்புகளுக்கும், 1, 2, 3 வது பாரங்களுக்குமிடையே எத்தகைய வேறுபாடும் இருக்கக் கூடாது. ஒரே வகையான பாடதிட்டம், ஒரே வகையான அந்தஸ்து, ஒரே வகையான உயர்வே இருவகை வகுப்புகளுக்கும் இருக்க வேண்டும். இன்னமும் சொல்லப் போனுல் ஒன்று முதல் எட்டு வரை உள்ள வகுப்புகளை ஆரம்பப் பள்ளிகள்தான் நடத்தவேண்டும். ஒன்பதுக்குமேல் உள்ள வகுப்புக்களைத்தான் உயர்நிலைப் பள்ளிகள் நடத்தவேண்டும். ஒரே மேனேஜ்மெண்டார், முதல் வகுப்பு வரை முதல் ஆருவது பாரம் உள்ள எல்லா வகுப்புகளையும் நடத்த விரும்பினுல், அவர்கள், ஆரம்பப் பள்ளி என ஒன்றும், உயர்நிலைப்பள்ளி என ஒன்றும், ஆக இருவேறு பள்ளிகளை நடத்த வேண்டும். ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி என இருவகைப் பள்ளிகள்தான் நாட்டில் இருக்க வேண்டுமே தவிர, மிடில் ஸ்கூல் என்பதாக ஓர் அமைப்பே இருக்கக்கூடாது.

நிலைமை இந்த விதமாகத் தெளிவுபடுத்தப்பட்டால், நான் மேலே குறிப்பிட்டதைப்போல, ஒரே வகுப்பில் இரு முறை படிக்க வேண்டிய சங்கடமும் அநீதியும் இனி இருக்கமாட்டா,

மற்றொரு முக்கியமான பிரச்சினை. கல்வியின் நோக்கத்தைப் பற்றியும், அதன் அமைப்பு முறையைப் பற்றியும் அதற்கு இருக்க வேண்டிய பாடதிட்டங்களைப் பற்றியும், அந்தப் பிரச்சினையில் ஈடு பட்டவர்களின் கருத்தை அறியாமலே அரசாங்கத்தார் அடிக்கடி தலையிடுவது இப்போதெல்லாம் சர்வ சாதாரண நிகழ்ச்சிகள் ஆகி விட்டன. ஆனால் இத்தகு நிலைமை நீடித்து நிற்பது நாட்டின் நன் மைக்கும் சரி, கல்வியின் வளர்ச்சிக்கும் சரி, சிறிதும் ஏற்றதல்ல என் பதே என் கருத்து. இன்றைய தினம் ஒரு குறிப்பிட்ட கட்சி, ஆட் சிப் பீடத்தில் அமர்ந்திருக்கக்கூடும். நாளையதினம், அந்தக் கட்சி மக்களின் ஆதரவை இழந்துவிட்ட காரணத்தால், வேறோர் கட்சி ஆட்சியை அமைக்கக்கூடும். பிறிதோர் நாள் பிறிதோர் கட்சியினர் ஆளவந்தார்களாக மாறக்கூடும். மக்களாட்சிக் கொள்கை நடை முறையில் உள்ள எந்த நாட்டிலேயும் ஆளும் கட்சிகள் மாறிக் கொண்டே இருப்பது இயற்கை. நிலைமை இப்படி இருக்கும்போது, ஒவ்வோர் கட்சி அதிகாரத்துக்கு வருகிறபோதும் அந்தந்தக் கட்சி யின் கொள்கையைக் கல்வித் திட்டத்தில் நுழைக்கத் தொடங்கினால், கல்வித் துறையில் குழப்பம் தவிர வேறென்ன விளையும்? எனவே தான் கூறுகிறேன். கல்விப் பிரச்சினைகளைப் பொறுத்த வரையில் முடிவுகூறும் அதிகாரம் ஆசிரியர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட கல்விச் சபைகளிடமே இருக்க வேண்டும். 1938ம் ஆண்டுக்கு முன்பு அப்படித்தான் இருந்தது. இப்போதும் இங்கிலாந்து போன்ற நாடுகளில் அப்படித்தான் இருக்கிறது. அப்படி இருந்தால் தான், கல்வித்துறை, அரசியல் சூதாட்டத்தில் ஆடப்படும் காயாக இல்லாமல், நிரந்தர நன்மையைத் தரும் நல்லதோர் கருவியாக விளங்க முடியும். எனவே ஒவ்வொரு மாவட்டத்திலும், அந்தந்த மாவட்டத்தில் உள்ள ஆரம்ப ஆசிரியர்கள், ஆசிரிய மானேஜர்கள், கல்வித்துறை வல்லுனர்கள் ஆகியோரைக் கொண்ட **மாவட்டக் கல் விக் குழு** (District Education Council) ஏற்படுத்தப்பட வேண் டும். ஆரம்பக் கல்விக்கு என்று ஒரு கல்விக் குழுவும் உயர்நிலைப்பள் ளிக்கு என்று ஒரு கல்விக்குழுவும் ஏற்படுத்தப்படலாம். இப்படி ஏற் படுத்தப்படும் கல்விக் குழுக்களின் ஒப்புதலைக் கேளாமல், அவற்றின் ஆராய்ச்சிக்கு அனுப்பாமல், எந்தப் புதிய திட்டத்தையும் கல்வி உலகில் நுழைக்கக்கூடாது அரசாங்கம். இப்படி ஓர் ஏற்பாடு உரு வாகுமானால், எவரையும் கேளாமல் ஓர் விபரீதத் திட்டத்தைக்

கொண்டுவந்து விட்டு, அதன் பிறகு மட்டற்ற எதிர்புக்கு ஆளானுரே மதிப்பிற்குரிய ஆச்சாரியார், அத்தகைய நிலைமை ஒரு நாளும் ஏற்படாது.

பள்ளிக்கூடப் பாடதிட்டத்தில் மதக் கல்விக்கு இடம் இருக்கக் கூடாது என்பதையும் இந்த நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன். பல்வேறு மதங்களைச் சேர்ந்தவர்களின் பிள்ளைகள் பள்ளிக் கூடத்தில் படித்துக்கொண்டிருப்பார்கள். எந்த ஒரு மதத்தின் கொள்கைகளைப் பள்ளிக்கூடத்தில் புகுத்திஞலும் ஏனைய மதத்தவர்கள் எதிர்க்கத்தான் செய்வார்கள். எந்த ஒரு மதத்தையும் சேராத மதக் கொள்கை என்பதாக ஒன்று இருக்கவும் முடியாது மதக் கல்வி என்று நாம் குறிப்பிடுவது எந்த ஒரு மதத்தின் கொள்கைகளையும் அல்ல, பொதுவான ஒழுக்கக் கோட்பாடுகளைத்தான் என்று சிலர் சொல்லக்கூடும். அப்படியாஞல் அத்தகு ஒழுக்கக் கோட்பாடுகளை சமுதாய ஒழுக்கக் கல்வி (Moral Instruction) என்றுதான் அழைக்க வேண்டுமே தவிர, மதக் கல்வி என்கிற மகுடம் சூட்டி, வீண்பகையையும் உட்பூசலையும் வளர்க்க வேண்டியது ஏன்? அவரவர்களுடைய மதம் அவரவர்களுடைய சொந்த விஷயம். அது அவர்களுடைய வீட்டோடு இருக்கவேண்டியதே முறை. பல்வேறு மதத்தினர் இணைந்து நிற்கும் பள்ளிக்கூடத்திற்குள் ஏன் அது புகுதல் வேண்டும்?

அருமை நண்பர்களே, எண்ணிப் பார்த்தால், பிரச்சினைகள், இன்னமும் பல, என் கண்முன்னே தோன்றத்தான் செய்கின்றன. நேரம் அதிகம் இல்லை. எனவே என் சொற்பொழிவை இந்த அளவோடு நிறுத்திக் கொள்கிறேன். ஆரம்பக் கல்வியைப் பற்றிய இப்படிப்பட்ட முக்கியமான பிரச்சினைகளையெல்லாம் அலசி ஆராய்ந்து தக்கதோர் முடிவு காண்பீர்கள் நீங்கள் என்பதிலே எனக்குத் துளியும் ஐயமில்லை. அதற்கு நற்செயல் புரியவே கூட்டப்பட்டிருக்கிறது இந்த மாநாடு என்பதையும் நானறிவேன். எனவேதான் இத்தகு மகாநாட்டிலே, என் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்ததைப்பற்றி மிகவும் மகிழ்கிறேன்.

அனைவருக்கும் என் நன்றி.

# ஜில்லா போர்டு தலைவரின் மாறுவேஷ விளைவு

★

## பல ஆசிரியர்கள் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டனர்

★

ராமநாதபுரம் ஜில்லா போர்டு தலைவர் ஸ்ரீ எஸ். ராமஸ்வாமி நாயுடு எம். எல். ஏ. மாறு வேஷம் பூண்டு, போர்டு நடத்தும் சில பள்ளிக்கூடங்களை கவனித்ததாகத் தெரிகிறது. இதன் விளைவாக, தலைவர் கேட்ட கேள்விகளுக்குப் பதிலளிக்க மறுத்த சில ஆசிரியர்களும், போர்டு சுற்றறிக்கையில் கண்ட விதிகளின்படி நடக்காத ஆசிரியர்களும் 'டிஸ்மிஸ்' செய்யப்பட்டனர் என்று, அறியப்படுகிறது. இன்னும் சிலருக்கு நோட்டீஸ் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

பள்ளிக்கூடத்திற்கு ஆஜரான மாணவர்கள், ஆஜராகாத மாணவர்கள் இவர்களைத் தெரிவிக்க தனித்தனி ரிஜிஸ்தர்களை வைக்க வேண்டுமென்று சமீபத்தில் ஜில்லா போர்டு ஒரு சுற்றறிக்கை விடுத்திருக்கிறது

—சு. மி.

---

## செய்தித் துணுக்கு

ஆசிரியர்கள் நிலைமை உயர்த்தப்பட்டாகவேண்டும். இல்லையேல் மனங்குலைந்த அவர்கள் பெருந்தீங்கு செய்வார்கள். அத்தீங்குகளைச் சரிப்படுத்த பல தலைமுறைகள் ஆகும். தபால் தந்தி ஊழியர்கள் ரயில்வே ஊழியர் போன்றவர்களைவிட மட்டமாக மதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு தொழிற் சங்கங்கள் இல்லை. மிகத் தன்னடக்கத்துடன் நடந்துகொள்ளுகிறார்கள். ஆதாரக் கல்வி முறையை நான் எதிர்ப்பவனல்ல. ஆனால் அதற்காக மொழி, வரலாறு முதலிய முக்கிய பாட அம்சங்களை புறக்கணிப்பது கூடாது. நமது தேசத்தில் கல்வி அபிவிருத்தியின் வேகம் மிகக்குறைவாக இருக்கிறது.

—டாக்டர். அமர்நாத் ஜா,

அ. இ. க. ஸ்தாபனங்கள் சம்மேளனத் தலைவர்.

---

Edited, Printed and Published by P. Veeraraghavan at the 'Venkatesan Press' 94/95 New St. Mannady, Madras-1.

## இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

M. விவேகானந்தா, B. Sc., L.T.,)

| | புத்தகத்தின் விலை | கெஜட் பக்கம் | அங்கீகாரமான தேதி |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | ... | ... |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 18 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 18 | 19–5–'54 |

## புதிய தேச ஆட்சி முறை

(D. சிவசங்கரராவ், B.A.,L.T.)

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 8 0 | 8 | 19–5–'54 |

## புதுமுறை சங்கக் கணிதம்

K. வீராசாமி, B.A.,L.T.,

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 8 0 | 14 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 14 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 14 | 19–5–'54 |

## நம் நாட்டு வரலாறு

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T

T. S. உமாபதி, M. A., L. T.,

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 5 0 | 11 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 7 0 | 8 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 9 0 | 10 | 19–5–'54 |

## சிறுவர் பூகோளம் (Tamil)

T. S. உமாபதி, M. A., L. T.

| | | | |
|---|---|---|---|
| இரண்டாம் வகுப்பு | 0 5 0 | 13 | 19–5–'54 |

V K. சேஷாத்திரி, B, A.,L. T.

| | | | |
|---|---|---|---|
| மூன்றாம் வகுப்பு | 0 7 0 | 12 | 19–5–'54 |
| நான்காம் வகுப்பு | 0 10 0 | 12 | 19–5–'54 |
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

**Mother India English Reader Primer - I 0 5 0**

## பாலூர பூகோளமு (Telugu)

| | | | |
|---|---|---|---|
| ஐந்தாம் வகுப்பு | 0 12 0 | 12 | 19–5–'54 |

Regd No. M 1508

## உயர்தர ஆரம்பப் பாடசாலைகளுக்கு

(For Higher Ele Schools)

## வீரபாண்டியன் தமிழ் வாசகங்கள்

(Vidwan- V. Subramaniam)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 12 | 0 | 23 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 0 | 14 | 0 | 41 | 19-5-'54 |

## புதுமுறை சங்கக் கணிதங்கள்

(V. K. Seshadri, B. A., L. T., & V. S. Leela B. A., B. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 2 | 0 | 15 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 4 | 0 | 15 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 4 | 0 | 16 | 19-5-'54 |

## சமூக நூல்

(T. S. Umapathy, M. A., L. T.)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 1 | 4 | 0 | 38 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 1 | 8 | 0 | 38 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 1 | 8 | 0 | 38 | 19-5-'54 |

## அநுமான முறை இலக்கணமும் உரை நடை ஆக்கமும்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஆறும் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |
| ஏழாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |
| எட்டாம் வகுப்பு | 0 | 12 | 0 | 41 | 19-5-'54 |

Printed at the Venkatesan Press, Madras—1.